கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

கேட்டீர்களா!

முதல் பரிசு பெற்ற ஜப்பானியச் சிறுமி

'சங்கர்ஸ் வீக்லி'யார் நடத்திய 5-ஆவது சர்வதேசச் சிறுவர் சித்திரக் கண்காட்சியில் மொத்தம் 310 பேர்களுக்குப் பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டது. முதல் பரிசு பெற்ற குழந்தைக்கு ஜனாதிபதியின் தங்கமெடல் பரிசளிக்க எண்ணியிருக்கிறார்கள். இந்த வருஷம் இந்தப் பரிசைத் தட்டிக்கொண்டு போகும் குழந்தை ஒரு ஜப்பானியச் சிறுமி. இவளுக்குப் பத்து வயதுதான் ஆகிறது. உப ஜனாதிபதியின் தங்கமெடல் இரண்டாவது பரிசு பெற்ற குழந்தைக்குப் போய்ச் சேரும். இந்தப் பரிசை, பாரிஸில் இருக்கும் இந்தியப் பெண் வீணா மாலிக் அடித்துவிட்டாள். பதினைந்து வயதான இவள் இந்தியத் தூதரான சர்தார் மாலிக்கின் பெண்.

ஒரிஸ்ஸா கவர்னர்

ராஜபாளையத்தைச் சேர்ந்த ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜா சென்ற தேர்தலுக்கு முன்பு சென்னை ராஜ்யத்தின் முதல் மந்திரியாக இருந்தவர். அவர் இப்போது ஒரிஸ்ஸா கவர்னராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ குமாரஸ்வாமி ராஜாவுக்கு இப்போது 56 வயதுதான் ஆகிறது. ஏற்கனவே தென்னிந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீ க. சந்தானம் விந்தியப் பிரதேசத்தில் லெப்டினன்ட் கவர்னராக இருந்து வருகிறார். இப்போது மற்றொரு தென்னிந்தியருக்கு கவர்னர் பதவி கிடைத்திருக்கிறது.

சென்னையில் ஷெர்பா டென்ஸிங்

எவரெஸ்ட் வீரர் டென்ஸிங் சென்னைக்கு 19-ஆம் தேதி வந்து சேர்ந்தார். இவருடன் இவர் மனைவியும் இரண்டு குமாரிகளும் வந்திருந்தனர். சென்னையில் நடைபெறும் பார்க் பேர் கண்காட்சி நிகழ்ச்சிகளில் சிலவற்றுக்கு இவர் தலைமை வகித்தார். எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்த இந்த வீரர் தம் அநுபவங்களைப்பற்றி ஒரு நூல் வெளியிடப் போகிறாராம். மலையேறும் பயிற்சிப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக இவர் நியமிக்கப்பட இருக்கிறாராம். டென்ஸிங் எளிமையும் இனிய சுபாவமும் கொண்டு விளங்குகிறார். இமய மலைச் சிகரத்தில் இந்தியக் கொடியைப் பறக்க விட்டவர் இவரே.

கல்யாணி காங்கிரஸ்

இந்த வருஷம் மேல் வங்கத்திலுள்ள கல்யாணி என்ற இடத்தில் காங்கிரஸ் மகாசபை கூடியது. இந்த வருஷமும் பிரதம மந்திரி பண்டித நேருவே அக்கிராஸனராக இருக்கிறார். சுமார் 12 லக்ஷ ரூபாய் இந்த மகாசபைக் கூட்டத்துக்காகச் செலவாகியிருக்கிறதாம்.

எல்லைக் காந்தி கபார்கான்

சுதந்தரம் கிடைத்ததிலிருந்து பாகிஸ்தானில் காவல் கைதியாக இருந்த எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் சமீபத்தில் விடுவிக்கப்பட்டார். இவர் இந்த நாட்டு விடுதலைக்காக தேசீய காங்கிரஸில் சேர்ந்து அரும்பாடு பட்டவர்.

பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 3

1 - 2 - 1954

குழந்தைகளே!	பக்கம் ..	2
சந்திரகிரிக் கோட்டை	..	3
கிரிக்கெட் திருவிழா	..	9
மாட்சு வேதாந்தம்	..	13
வைர நெக்லேஸ்	..	18
மனித குணம்	..	23
மகா கருமி	..	27
மாஸ்டர் பாலகுமார்	..	29
கண்ணன் கழக அங்கத்தினர்கள்		31
அசட்டுப் பிச்சு	..	33
திருக்குறள்	..	38
டி. எஸ். பி.	..	39

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி
மூன்றும் சேர்ந்த
குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும்
கற்பனைப் பெயர்களே.

வெளியீடு வெளியீடுகள்

பவழவல்லி - கி. ரா.

குழந்தைகள் சுவாரஸ்யத்துடன் படிக்கக் கூடிய இனிய தொடர்கதை. அற்புதமும் விசித்திரமும் கலந்த கதை. அழகிய படங்கள் நிறைந்தது. விலை அணா 12.

சமர்த்து மைனா - தி. ஜ. ர.

மைனா, குயில், குரங்கு, பூனை முதலிய பறவைகளையும் மிருகங்களையும் வைத்து எழுதிய கதைகள். அவற்றின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து எழுதிய உண்மைக் கதைகள். விலை அணா 8.

விஞ்ஞானம் பேசுகிறார்
பெ.நா.அ. & ஜே.பி.மா.

தந்தி, ரேடியோ, ஏரோப்ளேன் முதலியவைகள் எப்படி வேலை செய்கின்றன, யார் கண்டு பிடித்தார்கள் என்பவைகளை எல்லாம் படங்களாகவே விவரிக்கப் பட்டிருக்கின்றன. விலை அணா 8.

விளையும் பயிர் - கி. வா. ஜ.

காந்தி, ஜவாஹர், டாகுர், பாரதி முதலியோர் உங்களைப் போல் குழந்தைகளாக இருந்த போது எப்படி இருந்தார்கள், என்ன செய்தார்கள் என்பவற்றைக் கதைகள் போலவே சொல்லப்பட் டிருக்கின்றன. விலை அணா 8.

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

குழந்தைகளே!

கண்ணன் பொங்கல் இதழைப் பாராட்டியும் புதிய தொடர்கதையான சந்திரகிரிக்கோட்டையைப் பாராட்டியும் பல குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்ணனில் குழந்தைகள் எழுதும் விஷயங்களுக்கு அதிக இடம் தர இருப்பதாகத் தெரிவித்திருந்தேன். அதைப் படித்த பலர் கதைகளும் பாடல்களும் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இன்னமும் சில குழந்தைகளுக்குச் சந்தேகம். ''நாங்கள் கதை எழுதலாமா, எழுதி வைத்திருப்பதை அனுப்பலாமா?'' என்று கேட்டு எழுதுகிறார்கள். அவர்கள் நான் முன் இதழ்களில் எழுதியவற்றைச் சரிவர கவனிக்கவில்லை என்று எண்ணுகிறேன். இனியாவது அவ்விதம் கேட்டு எழுதாமல் தாராளமாக எழுதியிருப்பதை, ''ஆசிரியர், கண்ணன், சென்னை 4'' என்று விலாசமிட்டு அனுப்பலாம்.

பிரசுரம் ஆகாதவற்றைத் திரும்பப் பெற விரும்புபவர்கள் போதிய தபால் பில்லைகளை வைத்தால் திருப்பி அனுப்பி விடுகிறோம். சிலர் கதைகளை அனுப்புகிறார்கள்; தபால் பில்லைகளையும் வைக்கிறார்கள். ஆனால் முக்கியமானது எதுவோ அதைச் செய்ய மறந்துவிடுகிறார்கள். அவர்களுடைய முழு விலாசத்தையும் எழுதாமல் விட்டு விடுவதைத்தான் சொல்கிறேன். பிறகு, ''கதைகள் அனுப்பினேனே, என்ன ஆயிற்று?'' என்று அடிக்கடி எழுதுகிறார்கள். அந்தக் கடிதங்களிலும் முழு விலாசம் இருப்பதில்லை. இப்படிச் செய்யாமல் கதையைத் தெளிவாக ஒரே பக்கத்தில் மையினால் எழுதுங்கள். மேலே தலைப்பையும் உங்கள் பெயரையும் எழுதுங்கள். உங்கள் விலாசத்தையும் பக்கத்திலேயே எழுதினால்தான் நல்லது. மேல் உறையில் எழுதினால் போதும் என்று விட்டு விடாதீர்கள். இங்கே மேல் உறையைப் பத்திரப் படுத்துவதில்லை. உள்ளேயும் விலாசம் தெளிவாக இருந்தால்தான் திருப்பியனுப்பவோ, பிரசுரிக்கவோ இயலும். இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

கண்ணனில் புதிய பகுதிகள் சிலவற்றைச் சேர்க்கப் போவதாக முன்பு குறிப்பிட்டிருந்தேன். இப்போது புதிதாக ஒரு பகுதியை ஆரம்பிக்க எண்ணுகிறேன். இந்தப் பகுதியில் நீங்கள் எல்லாரும் கலந்து கொள்ளலாம். அந்தப் பகுதிக்குப் பெயரே, 'எங்கள் பகுதி' என்று பெயர். இதில் போன இதழ் கண்ணனில் வெளியான கதைகளைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தை விவாதிக்கலாம். அடுத்த இதழிலிருந்து இந்தப் பகுதி ஆரம்பமாகிறது. ஜனவரி 15-ஆம் தேதியிட்ட இதழ் பற்றிய உங்கள் கருத்தை எழுதுங்கள். எது நன்றாயிருந்தது, எது நன்றாக இல்லை, எந்தக் கதை உபயோகமானது, எது உபயோகமில்லாதது— இப்படி எந்த அபிப்பிராயத்தையும் ஒளிவு மறைவின்றி எழுதவேண்டும் சிறந்த கடிதத்துக்குப் பத்து ரூபாயும், அடுத்தபடியாகக் கருதிப் பிரசுரமாகும் கடிதங்களுக்கு உசிதமான பரிசும் தரப்படும்.

எல்லாரும் இந்தப் பகுதியில் கலந்துகொள்ளலாம்.

இன்னும் பல புதிய பகுதிகளும் பரிசுத் திட்டங்களும் அடுத்தடுத்து வெளியாகும்.

—ஆசிரியர்.

சந்திரகிரிக் கோட்டை

'ஜகு'

4

அன்று அரசனுடைய தேகநிலை இன்னும் மோசமாகிவிட்டிருந்தது. அவன் அருளேந்தியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவர் வந்ததுமே மெல்லிய குரலில், "என்ன, வழி கண்டு பிடித்து விட்டீர்களா?" என்றான்.

அருளேந்தி அரசனுடைய நிலையை உணர்ந்துகொண்டார். ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், "அரசே! உங்கள் மருமகன்களை உடனே அழைத்து வர, சாளுவ நாட்டுக்குத் தூதர்களை அனுப்பியிருக்கிறேன். அவர்கள் இன்னும் சில நாட்களில் வந்துவிடுவார்கள். அதற்குள் நீங்கள் ஒரு முறி* எழுதி வைத்து விடுங்கள். அந்த முறியை நான்கு பாகமாக்கிவிடுவோம். நம்முடைய அந்தரங்க நண்பர்களான மூன்று பாளையக்காரர்களிடமும் ஒவ்வொரு பாகத்தை ஒப்படைத்து விடுவோம். நாலாவது பாகத்தை நான் வைத்துக் கொள்கிறேன். இதை அந்த இருவரில் யார் தன்னுடைய திறமையினாலும் புத்தி சாதுரியத்தினாலும் வென்று, ஒன்று சேரக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கே இளவரசியைக் கொடுத்து, முடியும் சூட்டி விடலாம்" என்றார்.

இதைக் கேட்டதும் அரசன் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. ஆனால் அடுத்த கணமே அவனுக்குப் பெரிய சந்தேகம் ஒன்று உதித்தது.

"எல்லாம் சரி; இந்துமதியிடம் மாறாத அன்பும் இந்துமதிக்கு அவனிடம் பிரியமும் உண்டாக வேண்டுமே - அதை எப்படித் தீர்மானிப்பது?" என்றான்.

"அவர்களுக்குப் பல வீரமான போட்டிகள் வைப்போம். அந்தப் போட்டிகளில் அவர்களுடைய அன்பையும் சோதித்து விடக்கூடிய வழி செய்து விடலாம்" என்றார் மந்திரி.

"சபாஷ்; நல்ல யோசனை. உடனே மூன்று கோட்டைப் பாளையக்காரரையும் அழைத்து

★ மரண சாஸனம்.

வர ஏற்பாடு செய்யுங்கள்!" என்று கூறி அரசன் களைப்பாகச் சற்றுச் சாய்ந்து கொண்டான்.

அதற்கும் மறுநாளே புலிக் கோட்டை, சிம்மக் கோட்டை, பெரிய கோட்டைப் பாளையக்காரர் மூவரும் வந்து சேர்ந்து ராஜ பேட்டிக்காகக் காத்து நின்றார்கள். சந்திரவர்மனுக்கு அறுபது பாளையக்காரரிலும் அந்த மூன்று பேரிடமே அபார விசுவாசம். அந்த மூன்று பேரும் சிறுவயதில் அவனோடு கல்வி, வாள் வித்தை, யானையேற்றம் குதிரையேற்றம் அனைத்தையும் பயின்றார்கள். மூவரும் அரசனுக்கு நம்பிக்கையானவர்கள் என்பதோடு வீர தீரத்திலும் இணையற்றவர்கள். அரசனுக்கு முடிவு காலம் வந்து விட்டது என்று கேள்விப் பட்டதுமே

அவர்கள் பதறியடித்துக்கொண்டு ஓடி வந்துவிட்டார்கள்.

அரசன் சந்திரவர்மன் அவர்களை அன்புடன் கைதூக்கி வரவேற்றான். தன் மஞ்சத்துக்கு அடியில் கையை விட்டுத் தயாராகக் கிழித்து வைத்திருந்த

முறிப் பத்திரத்தை எடுத்தான். தலைக்கு ஒரு பாகமாக எடுத்துக் கொடுத்துவிட்டு, "அன்பர்களே! நான் விடைபெற்றுக் கொள்கிறேன். உங்களிடம் போகும்போது ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போகிறேன். இளவரசி இந்துவை உங்கள் பெண் போலவே நீங்கள் மதித்து, அவளைத் தகுந்த புருஷனிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்களுக்கு முடிசூட்டி நீங்கள் என்றும் போல் ராஜவிசுவாசத்துடன் நடந்து வரவேண்டும். இதுவே என் கடைசி வேண்டுகோள்' என்று வெகு உருக்கமாகக் கூறினான்.

பாளையக்காரர்கள் மூவரும் கண்ணீர் துளிக்க அரசன் முன்னே நின்றார்கள். அருளேந்தியின் கண்களிலும் அருகே நின்ற அந்தரங்கப் பணியாட்கள் காளன், கடம்பன் கண்களிலும் நீர் நிறைந்துவிட்டது.

அவர்கள் தங்களிடம் ஒப்படைத்த முறியின் பாகத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, "அரசே! தங்கள் ஆக்கினைப்படியே எங்கள் உயிருள்ளளவும் நடப்போம்" என்று உறுதி கூறினார்கள்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அரசன் வெகுநாள் உயிருடன் இருக்கவில்லை. "அமலாதித்தனும் விமலாதித்தனும் வந்துவிட்டார்களா?" என்று கடைசி வரையில் கேட்டுக்கொண்டேயிருந்தான். குமாரி இந்துமதியைப் பார்த்து, "நம் குலப் பெருமைக்கும் வீரத்துக்கும் இழுக்கு வராமல் நீ நடக்க வேண்டும்" என்று பொருள்படும்படி அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருந்தான்.

ஒரு நாள் அருளேந்தி மிகுந்த உற்சாகத்துடன் அரசனுக்கு ஒரு செய்தி கொண்டு வந்தார். "அரசே! தங்கள் சகோதரி குமாரர்கள் இருவரும் வந்து கொண்டிருக்கிறார்களாம். தலை நகருக்கு நாளை வந்து சேர்ந்துவிடுவார்கள். இப்போதுதான் தூதன் வந்து சொன்னான்" என்றார்.

அரசனுடைய கை பக்கத்தில் அமர்ந்திருந்த இந்துமதியின் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டது. அடுத்த கணம் கைப்பிடி நழுவிச் சோர்ந்து விழுந்தது. அதன் பிறகு எந்தவித அசைவும் இல்லவே இல்லை.

5

காலை நேரம். கம்பா நதிக்கரை சூரியனுடைய பொன்னொளி பட்டு ரமணீயமாகக் காட்சி யளித்தது. புள்ளினங்கள் இன்னிசை பாடின. நதியின் இரு கரையிலும் இருந்த காடுகளில் புள்ளி மான்கள் உல்லாசத்தோடு துள்ளித் திரிந்தன. முயல்கள் வெள்ளைப் பந்து குதித்து ஓடுவது போல் தத்திப் பாய்ந்தன. நடுவில் கம்பா நதி நெளிந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்தது.

இந்த அழகிய காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் இரண்டு இளம் வீரர்கள் குதிரைகளின் மீது ஏறி வந்தார்கள். ஒன்று பாலைப் பழிக்கும் வெள்ளை நிறக் குதிரை. மற்றொன்று செம்பழுப்பு நிறமுள்ள குதிரை. ஆனால் அவற்றின் மீது ஏறிச் சவாரி செய்தவர்கள் பார்வைக்கு ஒரே அச்சில் வார்த்தவர்களைப்போல் இருந்தார்கள். ஒரே நிறம், ஒரே சாயல், ஒரே உயரம், பருமன்! இரண்டு குதிரைகளும் ஒரே சீரான வேகத்துடன் சந்திரகிரி இருக்கும் தென் கிழக்குத் திக்கு நோக்கி வந்துகொண்டிருந்தன.

திடீரென்று இடப்புறமாக வந்த பழுப்பு நிறக் குதிரை ஒரு புதர் அருகே வந்து நின்றது. அதன்மீது ஏறியிருந்த இளைஞன் கீழே குதித்தான். கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் வெள்ளை வெளேரென்றிருந்த பெரிய முயல் குட்டி ஒன்றை அவன் பிடித்து விட்டான்.

அதைப் பார்த்த மற்ற இளைஞனும் நின்றான். "அடேடே, என்ன அழகான முயல் குட்டி இது!" என்றான்.

முயல் குட்டி திமிற முடியாமல் நடுங்கிக்கொண்டிருந்தது. அதன் கண்கள் மருண்டன.

"விமலா—பாவம்! அந்தக் குட்டியைப் பார்த்தாலே பரிதாபமாக இருக்கிறது. விட்டுவிடு. தாயை விட்டுப் பிரிக்காதே!" என்றான் குதிரைமீது இருந்தவன்.



"இருக்கட்டும் அண்ணு! இந்துவுக்கு முயல் குட்டி என்ருல் ரொம்ப ஆசையாம். அம்மா சொல்லியிருக்கிருள்!" என்ருன் விமலாதித்தன்.

அமலாதித்தன் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. அண்ணன், தம்பி என்று சொல்லிக்கொண்டார்களே தவிர அவர்கள் இருவருக்கும் சில நிமிஷ நேரமே வயது வித்தியாசம் இருந்தது. பார்க்கப் போனுல் முன்னுல் பிறந்தவன் விமலன்தான். இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்தால் முன்னுல் பிறப்பவனே இளையவன் அல்லவா? அந்தக் கணக்குத்தான் இவர்கள் விஷயத்திலும். இரண்டு பேரும் ஒரு தாயின் வயிற்றில் ஒரே கர்ப்பத்தில் பிறந்தபோதிலும் கூடவே பழகுபவர்களுக்குத் தான் அவர்களுக்குள் இருந்த குண வேற்றுமையைக் கண்டு பிடிக்க முடியும். விமலன் எப்போதுமே எதிலுமே கொஞ்சம்



துடியாகத்தான் இருப்பான். தாயிடமிருந்து குட்டியைப் பிரித்து அதை இந்துவுக்குப் பரிசு கொடுக்க வேண்டுமா என்பதே அமலனின் எண்ணம். ஆனால் அதை அவன் வாய் விட்டுச் சொல்லவில்லை. இரண்டு பேரும் அண்ணன் தம்பிகள் போவில்லாமல் நெருங்கிய நண்பர்களைப்போல் பழகி வந்ததால் விமலனும் முயல் குட்டியை விடவில்லை.

தூரத்தில் சந்திரகிரிப் பட்டணத்தின் கூட கோபுரங்கள் மேகங்களிடையே தெரிந்தன. நாலா பக்கங்களிலும் சின்னஞ் சிறு மலைச் சிகரங்களும் பெரிய பள்ளத்தாக்கும் காணப்பட்டன.

சகோதரர்கள் இருவரும் மௌனமாகவே சென்றுகொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் மனத்திலும் ஒவ்வொரு விதமான சிந்தனைகள் தோன்றிக்கொண்டிருந்தன. மாமாவிடமிருந்து தூதுவன் வந்தது, அம்மா அவர்களைத் தகுந்த துணையுடன் அனுப்பியது, அவர்கள் துணை வந்த சிறு படையினரை முன்னால் போக விட்டு விட்டுப் பின்னால் தனியாக வருவது எல்லாவற்றைப் பற்றியும் அவர்கள் தம் தம் மனத்தில் தோன்றியவாறு எண்ணிக் கொண்டு வந்தார்கள்.

சிறு வயதில் அவர்கள் இருவரும் இந்துவோடு அரண்மனைத் தோட்டத்தில் விளையாடி இருக்கிறார்கள். இப்பொழுது அவளுக்குக் கிட்டத்தட்ட பதினாலு பதினைந்து வயதிருக்கும். இப்போது பார்க்க எப்படியிருப்பாளோ? பார்த்தால் தங்களிடம் பேசுவாளோ, மாட்டாளோ என்றெல்லாம் எண்ணினார்கள்.

இவ்விதம் சகோதரர்கள் இருவரும் பகற்கனவில் செல்பவர்களைப்போல வந்துகொண்டிருந்தனர். குதிரைகளின் ஓட்டம் சிறிதும் தடைப்படவில்லை.

மேகங்கள் புகைபோல் மறைத்த கோபுரங்கள் பளிச்சென்று எதிர் வெயிலில் தெரியத் தொடங்கின. அப்போதுதான் சகோதரர்கள் இருவரும் தம் நினைவு பெற்றார்கள். தூரத்தில் வாத்தியங்களின் ஒலி சோகமயமான இசையை எழுப்பிக்கொண்டு காற்றில் கலந்து வந்தது. விண்ணை எட்ட வீசிப் பறக்கும் மரக்கலக் கொடிகள் இறங்கிக் கிடந்தன.

நகர்ப்புறத்தே வழக்கம்போல் உல்லாசமாகத் திரியும் வீரர்களைக் காணவில்லை. இதையெல்லாம் கவனித்த இரட்டைச் சகோதரர்களுக்குத் திக்கென்றது. ஏதோ விபரீத சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டார்கள்.

"மாமா அழைப்பதாகச் செய்தி வந்ததுமே எனக்குச் சந்தேகமாய் இருந்தது. இப்பொழுது இந்தச் சந்தேகம் இன்னும் அதிகமாகி விட்டதே!" என்றான் அவன்.

"எல்லாம் இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்துவிடுகிறது. மாமாவுக்குத்தான் ஏதாவது.." என்று சொல்லிக்கொண்டே வந்த விமலன் மேலே பேசத் தெரியாமல் வார்த்தைகளை விழுங்கினான்.

அவர்கள் கோட்டை வாயிலை நெருங்கியபோது ஒரு பெரிய கூட்டம் அவர்களை வரவேற்க ஆர்ப்பாட்டம் எதுவும் இன்றி அமைதியாக நின்றது.

(தொடரும்)

கிரிக்கெட் திருவிழா

'ராம்'

இந்தியக் கட்சி ஆட்டக்காரர்கள்: குலாம் அகமது (காப்டன்), ராய், ஸ்ரீநிவாஸன், மஞ்சரேகர், கோபிநாத், உம்ரிகர், ராம்சந்த், கிருபால் சிங், கென்னி, பட்கர், குப்தே, (12-ஆவது ஆள்) சூரிய நாராயண்.

ஸில்வர் ஜூபிலிக் கட்சி ஆட்டக்காரர்கள்: பென் பார்னட் (காப்டன்) ஸி. ஜே. பார்னெட், மியூல்மன், மார்ஷல், எட்ரிச், பார்ரிக், வாட்கின்ஸ், லாக்ஸ்டன், லோடர், பெர்ரீ, ஐவர்ஸன். (12-ஆவது ஆள்) சுப்பராவ்.

கிரிக்கெட் விழா என்ருல் முதலில் நமக்குச் சேப்பாக்க மைதானத்தின் நினைவுதான் வரும். ஆனுல் இந்த வருஷம் இந்த விழாவைக் கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் நடத்தப் போவதாக அறிவித்தபோது எல்லாருக்கும் கவலையாக இருந்தது. அங்கே பிட்ச் எப்படியிருக்குமோ, இடத்தின் ராசி எப்படியிருக்குமோ என்று முணுமுணுத்தோம்.



போகிப் பண்டிகை அன்று காலை பத்து மணிக்கே நாற்பதாயிரம் பேர் உட்காரக்கூடிய

கார்ப்பரேஷன் ஸ்டேடியம் நிரம்பி வழிந்தது. பெரிய பெரிய ஜாலர், டிரம், தம்பட்டம்,ஊதுகுழல் எல்லாவற்றையும் கொண்டு வந்து பற்பல இடங்களில் போய் அமர்ந்திருந்தார்கள் ரஸிகர்கள்.

இரண்டு கட்சிக் காப்டன்களும் பூவா, தலையா போட்டபோதே இந்தியக் காப்டன் குலாம் அகமது அதிருஷ்டக்காரராகத்தான் இருப்பாரோ என்று தோன்றியது. இந்தியா முதலில் ஆடத் தொடங்கியது.

முதலில் ராயும் ஸ்ரீநிவாஸனும் ஆட்டத்தை ஆரம்பித்தனர். எந்த வேளையில் ராய் உள்ளே அடி எடுத்து வைத்தாரோ அன்று முழுவதும் அடி அடி என்று அடித்து, செஞ்சரியைத் தாண்டி விட்டார். ஆட்ட முடிவின்போது 4 விக்கெட் நஷ்டத்துக்கு இந்தியக் கட்சி 222 ரன்கள் எடுத்திருந்தது.

முதல் நாள் ஆட்டத்தில் 132 ரன்கள் எடுத்திருந்தார் ராய். 141 ரன்கள் ஆனதும் லாக்ஸ்டனுடைய வீச்சுக்கு இரையானார். அதன் பிறகு ராம்சந்த்தும் கிருபால் சிங்கும் ஜோடி சேர்ந்தனர். கிருபால் சிங் முதல் தடவையாக டெஸ்ட் மாட்சில் இப்போதுதான் ஆடுகிறார். அப்படியிருந்தும் கொஞ்சம்கூட நடுக்கமில்லாமல் அவர் நிதானமாகவும் தைரியமாகவும் ஆடி 31 ரன்கள் எடுத்துவிட்டார். அடுத்தபடி கென்னி ஆடவந்தார். இவருக்கும் இதுதான் முதல் டெஸ்ட் மாட்ச். ஆனால் அவர் ஏறி ஆடியதையும் அடித்ததையும் பார்த்து ரஸிகர்கள் பிரமித்துப் போனார்கள். இந்தச் சமயத்தில் பாவம், ராம்சந்த் 96 ரன்களில் துரதிருஷ்டவசமாகச் செஞ்சரி போட 4 ரன்களே இருக்கையில் அவுட்டானார். வெள்ளி விழாக் கட்சிக்கு இப்போதுதான் நல்ல மூச்சு வந்தது. 65 ரன்கள் எடுத்த கென்னி ரன் அவுட் ஆனபோது குலாம் 14 ரன்கள் எடுத்திருந்தார். ஆட்டத்தின் ஸ்கோர் 440 ஆக இருந்தது. உடனே குலாம் ஆட்டத்தை 4-15 மணிக்கு டிக்ளேர் செய்துவிட்டார்.

வெள்ளி விழாக் கட்சியின் ஆட்டத்தை ஸி. ஜே பார்னெட்டும் மார்ஷலும் ஆரம்பித்தார்கள். 22 ரன்கள் சேர்ந்தபோது பார்னெட் அவுட்டாகி விட்டார். இரண்டாம் நாள் ஆட்டம் முடிந்தது.

மூன்றும் நாள் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாகவே தொடங்கியது. விக்கெட்டுக்கு மேல் விக்கெட்டுகளாக வெள்ளி விழாக் கட்சி சரியத் தொடங்கியது. மூன்றும் நாள் ஆட்ட முடிவின்போது வெள்ளி விழாக் கட்சி 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 189 ரன்களே எடுத்திருந்தது. மியூல்மன் 99 ரன்கள் எடுத்திருந்தார். அவரும் ஐவர்ஸனும் அவுட்டாகாமல் இருந்தனர். குலாம் அன்று மட்டும் 4 விக்கெட்டுகளும் குப்தே மூன்று விக்கெட்டுகளும் பட்கர் ஒரு விக்கெட்டும் எடுத்திருந்தார்கள்.

நாலாம் நாள் ஆட்டத்தை மியூல்மனும் ஐவர்ஸனும் தொடர்ந்து ஆடினார்கள். செஞ்சரி போட்டும் அடிக்க வேண்டிய பந்துகளை அடிக்காமலும் எடுக்க வேண்டிய ரன்களைத் துணிந்து எடுக்க

முடியாமலும் மியூல்மன் நேரத்தைப் போக்கிக்கொண்டே 'போர்' அடித்தார். ஒன்றேகால் மணி நேரம் விடாமல் போராடி அவருக்கு 124 ரன்கள் கொடுத்து அவரை வீழ்த்தப்பட்ட பாடு பெரும்பாடாகி விட்டது. குப்தேக்குத்தான் அந்தப் பெருமை போய்ச் சேர்ந்தது. மியூல்மனுக்குப் பிறகு லோடர் வந்து 3 ரன்கள் எடுத்து, குலாமுக்குப் பலியானார். 222ரன்கள் ஆனபோது 10 விக்கெட்டுகளும் விழுந்து ஆட்டம் முடிவடைந்தது. இன்னும் 218 ரன்கள் எடுக்க வேண்டியிருந்ததால் வெள்ளி விழாக் கட்சியே திரும்ப ஆடும்படி சொல்லிவிட்டார் குலாம். முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்களைப் பலி கொண்டிருந்தார் குலாம். இப்போது இரண்டாவது இன்னிங்ஸில் தொடக்கத்திலேயே சேர்ந்தாற்போல் மூன்று விக்கெட்டுகளைச் சரித்து விட்டார். பெரும்பாலும் சென்னையில் ஆடிய ஆட்டங்களே தனக்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கின்றன என்று குலாம் முதல் நாள் சொல்லியிருந்தார். அது உண்மைதான் என்று அவருடைய ஆட்டம் நிரூபித்துவிட்டது. ரஸிகர்கள் தீபாவளியின்போது வாங்கியிருந்த ஆட்டம் பாம் வெடிகளைப் பத்திரமாகக் கொண்டு வந்துவெடித்து மைதானத்துக்குச் சுறுசுறுப்பை உண்டாக்கினார்கள்.



நாலாம் நாள் ஆட்டம் முடியும் நேரத்தில் குப்தேயின் வீச்சுக்கு மார்ஷல் 36 ரன்களுடன் பலியாகிவிட்டார். 4 விக்கெட் நஷ்டத்துக்கு ஜூபிலிக் கட்சி 94 ரன்கள் எடுத்திருந்தது.

கடைசி நாள் ஆட்டத்தன்றுதான் இந்தியாவுக்கு மகோன்னத வெற்றி கிடைத்தது. இந்தியாவுக்கு ஒரு இன்னிங்ஸ் 50 ரன்கள் வித்தியாசத்தில் கிடைத்த வெற்றி மகோன்னத வெற்றிதான் என்பதில் என்ன சந்தேகம்? 168 ரன்கள் எடுத்த வெள்ளி விழாக்கட்சி ஐந்தாம் நாள் மாலை 2-15 மணிக்கு, பத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியுற்

றது. இந்த இரண்டு இன்னிங்ஸ்களிலும் மட்டும் மொத்தம் 12 விக்கெட்டுகளைக் குலாம் வீழ்த்தியிருக்கிறார். குப்தே ஏழு விக்கெட்டுகள். பட்கர் ஒரு விக்கெட். ஏற்கனவே வெள்ளி விழாக் கட்சி டில்லியில் இன்னிங்ஸ் தோல்வியுற்றிருக்கிறது. பம்பாய் டெஸ்ட் டிராவாகி விட்டது. கல்கத்தாவில் மட்டும் வெள்ளி விழாக் கட்சி ஜயமடைந்திருந்தது. இப்போது மீண்டும் சென்னையில் தோல்வி. இனி லட்சுமணபுரி டெஸ்ட்தான் பாக்கி யிருக்கிறது. இருக்கும் நிலையைப் பார்த்தால் இந்தியாவுக்கே இறுதி வெற்றியும் கிடைத்து விடும் போலிருக்கிறது. வெள்ளி விழாக் கட்சியில் மியூல்மன், வாட்கின்ஸ், பார்னெட் இவர்களைத் தவிர நல்ல பாட்ஸ்மென்களே இல்லை என்று சொல்லிவிடலாம். ஐவர்ஸன், பெர்ரி, லோடர், லாக்ஸ்டன் ஆகிய நால்வரே திரும்பத் திரும்ப போலிங் செய்கிறார்கள். ஸ்பின் போலர் ஐவர்ஸனுக்கு சென்னை ஆட்டத்தின்போது கையில் அடிப்பட்டுப் போனது வெள்ளிவிழாக் கட்சிக்குப் பெரிய துரதிருஷ்டமாகும்.

வொர்ரலும் ஸிம்ப்ஸனும் சென்னை ஆட்டத்துக்கு இல்லாமல் போன குறை பெரிய குறையாகத்தான் இருந்தது.

லட்சுமணபுரி டெஸ்டுக்கு பட்கர் காப்டனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். 31 - ஆம் தேதி நடக்கவிருக்கும் இந்த ஐந்தாவது டெஸ்ட் மாட்சில் முஷ்டாக் அலி, உம்ரிகர், குலாம் அகமது, ராம் சந்த், ராய், குப்தே, கென்னி, ஜோஷி, பஞ்சாபி, சூரியநாராயணன் ஆகியோர் ஆடுகிறார்கள். 12-ஆம் நபர் லஷ்காரி.

போட்டோ: டி. எஸ்.

மாட்சு வேதாந்தம்

எஸ். ரங்கநாயகி

1

[சுப்பராமன்: தந்தை; விசாலம்: அவர் மனைவி; ரமணி: மகன்.]

ரமணி: தாயே!

விசாலம்: என்னடா தாய், பேய்ன்னு ஆரம்பிக்கிறே?

ரம: தாயே, பிழை பொறுத்தருளவேண்டும். பேய் என்னும் சொல் நும் வாயினின்று வருவதற்கு அவசியமில்லை. தாங்கள் தாயுருவமுடன் என் முன் காட்சி அளிக்கும் சமயம் பேய் என்னும் சொல்லை விலக்கிடுக. தாயே!

சுப்ப: ஏண்டா, உங்க தமிழ் வாத்தியார் ரொம்ப நன்ருகச் சொல்லிக் கொடுப்பாரோ?

ரம: தந்தையே, தங்கள் கேள்வியின் நோக்கம் யாது?

சுப்ப: இல்லை, சுத்த இலக்கணத்தில் பேச ஆரம்பிச்சிருக்கியேன்னு கேட்டேன்.

விசா: ஏதாவது காக்காய் பிடிக்க வந்திருப்பான்.

ரம: அந்த வழக்கத்தைப் போன பரீக்ஷையோடு விட்டாச்சு.

சுப்ப: என்னடா அப்படி?

ரம: அதை ஏன் கேட்கிருய்? இந்த வாத்தியார்களைக் காக்காய் பிடிக்கப் பிடிக்க, அவர்கள் தலைக்குமேல் ஏறுகிருர்கள். நம்மிடம் ஏதாவது வேலை வாங்கவும் ஆரம்பித்து விடுகிருர்கள்.

விசா: சரி, சரி. இப்ப விஷயத்தைச் சொல்லு. இல்லாவிடில் வாசலில் போய் விளையாடு.

ரம: இனிமேல் விளையாடப் போவதை விட்டுவிட்டேன், அம்மா.

சுப்ப: ஏன், நேற்று ஸ்கூல் கிரிக்கெட் மாட்சில் தோற்றதிலே ஸ்கூல் காப்டனிடம் நல்ல திட்டோ?

ரம: அவன் கிடக்கிருன், அற்பப் பயல்! பந்து எடுத்து வீசத் தெரியாது, பெரிய பேச்சுப் பேசருன்! ஏதோ பணக்கார வீட்டுப் பிள்ளையாச்சேன்னு காப்டஞகப் போட்டோம். அதனாலேதான் எங்க கட்சி தோற்றது.

சுப்ப: அட போடா, பித்துக்குளி. நேற்று மாட்சிலே நீ ரெண்டு ரன்கூட எடுக்கலே. பிரமாதமாப் பேசறே!

ரம: நீங்க ஒன்றும் விஷயம் தெரியாமல் பேசாதீர்கள், அப்பா. சும்மாச் சொல்லிட்டா ஆச்சா? இந்த ரெண்டுங்கெட்டான் பிள்ளைகளோடு என்னப்பா விளையாட்டு?

விசா: அப்பப்பா, எப்போ பார், இந்தக் கிரிக்கெட்டைப் பற்றித்தாஞ பேச்சு! கிரிக்கெட் விளையாடி விளையாடித்தான் உன் படிப்பே கெட்டுப் போச்சு.

ரம: கெடாமல் வைத்திருக்கத்தான் இப்ப வழி பண்ணப் போறேன். அதற்கு நீதான் அருள் புரியணும்.

விசா: விஷயத்தைச் சொல்லித் தொலையேன். என்ன வெட்டிப் பேச்சு?

ரம: ஒன்றும் இல்லேம்மா. ஒரு அஞ்சு ரூபா கொடு போதும்.

விசா: எதுக்குடா அஞ்சு ரூபா?

ரம: வந்து....வந்து....எங்க ஸ்கூல்லே எல்லாரும்..

விசா: தெரியும்டாப்பா. கிரிக்கெட் மாட்ச் பார்க்க எல்லோரும் ஏற்பாடு செய்தாச்சு, அதானே?

ரம: அதில்லேம்மா வந்து..

விசா: சும்மா மென்று விழுங்காதே. எனக்கு எல்லாம் விஷயம் தெரியும். மாட்ச் பார்க்கத்தான் இந்த ஏற்பாடு. பாடத்தில் ஒரு சிரத்தையும் காணும். அப்பப்பா, இந்தக் கிரிக்கெட் மாட்சை எதுக்குத்தான் ஏற்பாடு செய்தாளோ? பிள்ளைகளெல்லாம் பாழாப்போகிறது. எவனோ இரண்டு பேர் போது போகாமல் அலைகிறார்கள். அவர்களைக் கூட்டி வைத்து, அவாளுக்குப் போகவர பிளேன் டிக்கெட் கொடுத்து, காசைக் கரியடிக்கிறா. பார்க்கிறவா வீட்டிலே அமர்க்களத்தைச் சொல்லி முடியாது. வயிற்றுக்குக் கஞ்சியில்லாட்டாலும் மாட்சுக்கு எங்கிருந்துதான் பணம் வருகிறதோ? பம்பாய், டில்லி மாட்சைக் காதால் கேட்க ரேடியோ மீட்டர் செலவு. எனக்கு இந்தத் தண்டச் செலவு பிடிக்கவில்லை.

ரம: அதுக்கு இல்லே, அம்மா.

விசா: போடா சரிதான், நீ என்ன நச்சுப் பண்ணினாலும் நான் காசு தரமாட்டேன்.

ரம: கிரிக்கெட் மாட்சுக்குத்தானே பணம் தரமாட்டே? வேறு எதுக்கானாலும் தருவியா?

விசா: வேறு எதுக்கு?

ரம: ஒன்றும் இல்லேம்மா. நீ சொல்வது போலவே நாங்களும் இந்தக் கிரிக்கெட்டைப் 'பாய்காட்' செய்யப் போறோம். கிரிக்கெட் வெறும் தடியர்கள் விளையாட்டு.

சுப்ப: ஏண்டா, 'சீ, சீ இந்தப் பழம் புளிக்கும்' சாமாசாரமா? உனக்கு ஆடவரல்லேன்னா அந்த ஆட்டமே தண்டமா?

ரம: நீங்க சும்மா இருங்கோ, அப்பா. இதோ இந்த விஷயத்தைக் கேளு, அம்மா. எங்க ஸ்கூல்லே இரண்டு கட்சி. ஒன்று கிரிக்கெட் பார்க்கப்போவது. மற்றொன்று அந்தக் கிரிக்கெட் பார்க்கப் போகும் பணத்தில் எவ்வளவு சந்தோஷம் அநுபவிக்கலாம் என்று காண்பிக்கப்போவது. நான் இரண்டாவது கட்சியைச் சேர்ந்தவன். நாங்கள் கிரிக்கெட் ஆட்டத்தின் 5 நாளும் ஜம்மென்று ஊர் சுற்றப் போகிறோம். கிரிக்கெட் பார்ப்பவர்கள் மண்டையில் வெயில் காய, தலைவலி அநுபவிக்கப் போகிறார்கள். கிரிக்கெட்டில் செலவிடும் பணத்தை வேறு விதத்தில் ஆனந்தமாகக் கழிக்கலாம் என்று சவால் விட்டது நான்தான். அதனால் என் வார்த்தையை உண்மையாக்க, தயவுசெய்து தாயே, ஒரு அஞ்சு ரூபாய் அருளவேண்டும்.

விசா: ஏதோ ஒரு சாக்குப் போக்குச் சொல்லி ஒரு 5 ரூபாய்க்கு வழி வைக்கிறாய். அவ்வளவுதானே? சரி சரி, தொலே!

ரம: என்ன இருந்தாலும் எங்க அம்மாவைப்போல் பூலோகத்தில் இனி ஒருவரும் கிடையாது. (குதிக்கிறான்.)

2

விசா: என்னா, இந்த உண்டிப் பெட்டியில் ஆறு ரூபாய் வைத்திருந்தேனே. அதை எடுத்தீர்களா?

சுப்ப: எந்த உண்டிப் பெட்டி?
விசா: அலமாரி உண்டி.
சுப்ப: எந்த அலமாரி?
விசா: சாமான் அலமாரி.
சுப்ப: எந்தச் சாமான்?
ரம: உப்புப் புளி சாமான்.
சுப்ப: எந்த உப்பு?
ரம: நாட்டு உப்பு.
சுப்ப: எந்த நாடு?
ரம: பாரத நாடு.
சுப்ப: எந்தப் பாரதம்?
ரம: மகாபாரதம்.

விசா: (கோபத்தோடு) அப்பப்பா, முடிந்ததா இல்லையா, உங்க விளையாட்டு! கேட்டால் கேட்டதற்குப் பதிலைக் காணோம். என்ன விளையாட்டு, வேண்டிக் கிடக்கு? பணத்தை யார் எடுத்தது?

சுப்ப: எனக்கு ஒன்றும் தெரியாது பராபரமே.

விசா: அப்பன்னு அதுக்குக் கால் முளைத்துப் போய்விட்டதா?

ரம: பின்னே கை முளைக்குமா?

விசா: சீ அதிகப் பிரசங்கி, வாயை மூடடா.

ரம: உண்மையைச் சொல்ல வந்தால் அப்படித்தான் கோபிப்பாய்; நான்தான் சொல்றேனே. அதற்குக் கை கால் முளைக்கவேண்டிய அவசியமே இல்லை. நமக்குத்தான் கடவுள் கை கால் கொடுத்திருக்கிறாரே!

விசா: சட், உன் வாயை மூடமாட்டே? இப்ப அந்தப் பணம் எங்கே? உன் அப்பாவைத் தவிர யார் எடுப்பா?

சுப்ப: ஏய், தெரிந்து பேசு.

ரம: அப்பா, நீங்கள் சொல்வது ரொம்ப ரைட். அம்மாவுக்குத் தெரியாமல் ஏன் பேசணும்? எனக்குத்தானே தெரியும். அம்மா

இதோ பார், அப்பாவினுடைய இரண்டு கால்களும் அங்கே அவரை இழுத்துச் செல்ல, அவர் கைகள் அதை எடுக்கும் வேலையைச் செய்துவிட்டன.

சுப்ப: ஏய், ராஸ்கல்! எப்போடா?

ரம: மாலைப் பொழுதினிலே - முந்தா நாள் - தோழிகளுடன் அம்மா பேசிடும் போதினிலே. .

சுப்ப: அடாடா, விசாலம்! இப்பத்தான் நினைவுக்கு வருகிறது.

விசா: சரி, அந்தப் பணத்தை என்ன செய்தீர்கள்?

சுப்ப: அதையா? வந்து வந்து. .

விசா: நீங்க 'வந்து வந்து'ன்னு இழுக்கவேண்டாம். எனக்குத்

தெரியும். அந்தப் பணத்திலே கிரிக்கெட் மாட்சுக்கு டிக்கெட் வாங்கியாச்சு, அதானே?

சுப்ப: அச்சச்சோ, அந்த வழிக்கு நான் ஏன் போறேன்? நீ அன்றைத் தினம் ரமணிக்குக் கொடுத்த திட்டுலே நான் அந்த ஆசைக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டேன்.

விசா: பின்னே அந்த ரூபாய்க்கு என்ன செலவாம்? காப்பிக் கொட்டையும் சர்க்கரையும் வாங்க அந்தப் பணத்தை வைத்திருந்தேன். அதை நிமிஷமா அபேஸ் பண்ணியாச்சு.

சுப்ப: என்ன பண்ணுவது? 'ஒருவன் சரணுகதின்னு காலிலே விழுந்து விட்டால், அவனுக்கு அபயம் கொடு' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறுர்கள்.

ரம: யாரப்பா, அந்த விபீஷண சரணுகதி அடைந்தவன்?

சுப்ப: அதாண்டா அந்தச் சீனிவாசன்; அவன் மனைவிக்குப் பிரசவம். நர்ஸுக்குப் பணம் கொடுக்கணுமாம்.

விசா: ஆறு ரூபாய்க்கு வந்து விடும் அந்த நர்ஸ் யார்? என் தங்கை பிரசவத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.

சுப்ப: விஷயத்தை முழுவதும் கேள். குழந்தைகளுக்கெல்லாம் ஜுரமாம். ஆபீஸிலே ரெண்டு மாதச் சம்பளம் பாக்கியாம். 'வயிற்றுப் பாட்டிற்கே கஷ்டப்படுகிறேன். 20 ரூபாய் கொடு' என்று காலைப் பிடித்துக்கொண்டு அழுதான். உன்னைத் தேடினேன். நீ பேச்சு மும்முரத்தில் இருந்தாய். அதனுல் நானே பணத்தை எடுத்துக் கொடுத்து..

ரம: ஆபத்பாந்தவன் அநாத ரக்ஷகன் - என்ற பட்டத்தை அடைந்தீர்கள்.

சுப்ப: பிறகு சொல்ல மறந்து விட்டேன். அதான் விஷயம்.

விசா: ரொம்ப நன்ருயிருக்கு, உங்க வேலை. எவனே வழியில் போறவன் அழுதானும், இவர் இரங்கி உருகி விட்டாராம். போது விடிந்தால் காப்பிக் கொட்டை, சர்க்கரை கிடையாது. அதற்கு எங்கே போவது?

ரம: அதெல்லாம் நீ பயப்படாதே. அப்பா யாரிடமாவது விபீஷண சரணுகதி அடைந்து காப்பிக் கொட்டை, சர்க்கரை அடைந்து வெற்றி மாலை சூட்டுவார். அதனுல், இப்பொழுது இருக்கும் பொடியில் முதலில் பேஷான காப்பி போட்டுக்கொடு.

3

கிரிக்கட் மாட்ச் மைதானம்.

சுப்ப: ஏண்டா, திருட்டுப் பயலே, ரமணி! தலையிலே ஹாட்டைப் போட்டுவிட்டால் ஆளைத் தெரிந்துக்கொள்ள முடியாது என்ற எண்ணமா? திருட்டுத்தனமா கிரிக்கெட் மாட்ச் பார்க்க வந்து விட்டாயா?

ரம: நீங்கள் வழி காட்டியதைத்தான் நானும் செய்தேன். நீங்கள் முண்டாசு கட்டி ஆளை மறைத்துக் கொள்ளப் பார்த்தீர்கள். நான் ஹாட்டைப் போட்டுக் கொண்டேன்.

சுப்ப: வெயிலுக்காக முண்டாசு கட்டினேன்.

ரம: நான் ஹாட் போட்டதற்கும் அந்தக் காரணமே இருக்கக் கூடாதா?

சுப்ப: ஆமாம், கிரிக்கெட் எதிர்ப்புக் கோஷ்டியும் ஆதரிக்கும் கோஷ்டியும் சமரஸ மாகிவிட்டதா? எண்டாபயலே?

ரம: அம்மாவிடமிருந்து பையில் பணம் வந்ததுமே சமரஸ மாகிவிட்டது.

சுப்ப: அப்படின்னா நீ சொன்னதெல்லாம் பொய்யா?

ரம: உங்களிடம் சீனிவாசன் என்பவர் கடன் வாங்கியது உண்மையானால் இதுவும் உண்மை. இல்லாவிடில் இதுவும் பொய்.

சுப்ப: சரி, சரி. இதையெல்லாம் அம்மாவிடம் போய்ச் சொல்லாதே.

ரம: சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. அம்மா பார்த்துக் கொண்டே யிருக்கிறாள்.

சுப்ப: என்னடா உளறுகிறாய்?

ரம: அதோ பின்னால் இருக்கும் பெண்கள் வரிசையிலே கூலிங் கிளாஸ் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பது யார் தெரியுமா? அவள்தான் சாக்ஷாத் மிஸஸ் விசாலம் சுப்பராமன். என் அன்புமிக்க தாய், அடியேனுடைய வீட்டும் பக்கத்தில்தான் இருக்கிறது.

சுப்ப: அட.... ஆமாண்டா...... பார்த்தாயா, நம்மைத் திட்டிவிட்டு அவளே வந்து விட்டாளே. இரு, அவளுக்கு வழி வைக்கிறேன். (விசாலத்தினிடம் போய்)

எண்டி விசாலம், இந்தப் பாழாய்ப்போன மாட்சுக்கு எங்களைத் திட்டிவிட்டு நீஎன் வந்தாயாம்?

விசா: அதை ஏன் கேட்கிறீர்கள்? எங்க லேடீஸ் கிளப்பிலே ஒரே பிடிவாதமா எல்லோரும் போய்த்தான் ஆக வேண்டும் என்று அடம்செய்தார்கள். உலகத்தோடு ஒட்டி வாழாமல் நான் மட்டும் தனியாக இருந்தால் ஊர் சிரிக்கும். அதனால் வந்தேன்.

ரம: அப்படி எம்மா சொல்கிறாய்? நானும் அப்பாவும் எவ்வளவு தூரம் உண்மை சொன்னோம் என்று பரீட்சை செய்ய வந்தேன் என்று சொல்லிவிடேன்.

விசா: அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். என்னா, இந்த இடத்திலே ரொம்ப வெயில் அடிக்கிறதே. மேல் வகுப்புக்கு டிக்கெட்டை மாற்றிக்கொண்டு போய் விடலாமா?

(திரை)

தகப்: நான் கடுதாசி கொடுத்தேனே, ஹெட்மாஸ்டரின் பார்வையில் படும்படி வைத்தாயாடா?

பையன்: வைத்தேனே! அவருடைய ஸீட்டில் ஒரு குண்டூசியைக் குத்தி வச்சிருக்கேன்.

வைர நெக்லேஸ்

கனகசபை

திரு திருவென விழித்தான் கண்ணாயிரம். மறுபடி ஒரு தடவை பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். நடையைச் சிறிது வேகமாகவே ஓட்டினான். வரிசை யாக இருந்த கடைகளில் அவன் கண்கள் அலைந்தன. "பரமதயா ளன் அண் கோ" ஏலக் கம்பெனி யின் போர்டு பக்கத்திலே பளிச் சிட்டது. சிறிதும் யோசனை யின்றி உள்ளே நுழைந்தான் கண்ணாயிரம். உள்ளே நின்றபடியே, தன்னைத் தொடர்ந்து வந்தவன் வருகிறானா என்று ஊடுருவிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

தூரத்தில் தன்னைத் தொடர்ந்து வந்த ஆளைப் பார்த்ததுமே, கண்ணா யிரத்திற்குக் 'கபீ'ரென்றது. அவன்தொடர்வது தன்னைத்தான் என்பதும், அவன் ஒரு ஸி. ஐ. டி. போலீஸ்காரன் என்பதும் அவ னுக்கு நன்றாகப் புரிந்துவிட்டது. நேற்றாக இருந்திருந்தால்..? போலீஸ்காரன் என்ன.., இன்ஸ் பெக்டர் ஜெனரல் வந்தால் கூட அவன் கவலைப்பட்டிருக்க மாட் டான். ஆனால் இன்று.. அவன் மடியில் ஒரு வைர நெக்லேஸ் இருந்தது.

கண்ணாயிரம் ஒரு திருடன் தான். ஆனால் பெரிய திருடனல்ல. சாதாரண சில்லறைத் திருடன். கடைகளில் பேசிக் கொண்டே சாமான்களை 'அபேஸ்' செய்வது, ஏமாந்தவர்களின் பைகளிலுள்ள பண பாரத்தைக் குறைப்பது, ஆகிய தொழிலைத்தான் வழக்கமாகச் செய்து வந்தான். இதற்காக அநேக தடவை 'உள்ளே' போய் விட்டு வந்திருந்தான். கடைசியாக வெளியே வந்ததிலிருந்து அவன் வியாபாரம் சரியாக நடக்கவில்லை. போலீஸ்காரர்கள் முக்கியமான இடங்களில் எல்லாம் நின்று கொண்டு இவனது வியாபாரத் தைக் கெடுத்தார்கள். வியாபார மந் தத்தில் வாடி வதங்கிய கண்ணா யிரம் ஒரு நாள் துணிந்து பெரிய வேலையில் இறங்கினான். அதிர்ஷ்டவசமாக ஒரு வைர நெக் லேஸ் கிடைத்தது.

"இனி கொஞ்ச நாட்களுக் காவது, வேலைக்குப் போகாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்" என்று சந்தோஷப் பட்டுக்கொண் டான். சில நாட்களுக்கு முன்பு அவன் செய்த ஒரு சிறிய திருட் டுக்காகப் போலீசார் தன்னைத் தேடுவார்களென்பது அவனுக்குத் தெரியும். அவர்களிடம் அகப்பட் டுக்கொள்ளுமுன் அதைப் பத்தி ரப் படுத்திவிடவேண்டும் என்னும் அபிப்பிராயத்தில் தான் கடைத் தெருவை நோக்கி வந்து கொண் டிருந்தான் கண்ணாயிரம். வெகு நேரமாகத் தன்னை யாரோ தொடர்ந்து வருவது போல் ஒரு பிரமை தோன்றிக் கொண்டே யிருந்தது அவ னுக்கு.

அவன் மனம் பீதியடைந்தது. ஒரு கவலைதான். அந்த ஸி.ஐ.டி. யிடம் மாட்டிக் கொள்வதற்குள் கையிலிருக்கும் நெக்லேஸை எங்காவது ஒரு நல்ல இடத்தில் ஒளித்து வைத்துவிட வேண்டும். பழைய குற்றத்திற்குச் சில நாட்கள் ஜெயிலிலிருக்க நேர்ந்தாலும், திரும்பி வந்த பிறகாவது கொஞ்ச நாட்களுக்குச் சௌக்கியமாய்க் காலந்தள்ளலாம் அல்லவா?

மனத்துள் தீர்மானம் செய்து கொண்டான் கண்ணாயிரம். ஏலக் கம்பெனியின் உள் பக்கமாகத் திரும்பினான்.

"என்னப்பா வேணும்? உள்ளே எல்லாச் சாமானும் இருக்கும், போய்ப்பாரேன்" என்றான் ஏலக் கம்பெனி குமாஸ்தா. உள்ளே நுழைந்தான் கண்ணாயிரம். மேஜை நாற்காலிகள், கட்டில் மெத்தைகள், பீரோக்கள், பெஞ்சிகள், ரேடியோ, டைப் மெஷின், சைக்கிள், கிராமபோன், மற்றும் ஏராளமான சாமான்கள், புதியதும் பழையதும், நல்லதும் ஓட்டை உடைசலுமாக எங்கும் சிதறிக் கிடந்தன. கவனித்துக்கொண்டே வந்தான் கண்ணாயிரம்.

ஒரு மூலையில் கிடந்த பழைய காலத்துக் கிராமபோன் ஒன்று அவனைக் கவர்ந்தது. அதன் மேலிருந்த பளபளப்பெல்லாம் போய் விகாரமாகக் காட்சியளித்தது. வாய் உள்ள, குழாய் பொருத்தும் மாடலான அது, 'வாய்' பாகமின்றி மொட்டையாக இருந்தது. 'வாய்' பொருத்தப்பட

வேண்டிய இடத்தில் ஒரு சாண் உயரத்திற்கு வெறும் கட்டையான குழாய் ஒன்று நீட்டிக் கொண்டிருந்தது. ஒரு நிமிஷம் அந்தக் குழாயையே நோக்கினுன் அவன்.

“இம்மாதிரி ஒரு சாமானை, உபயோகம் அற்றதை, சும்மாக் கொடுத்தால்கூட யாரும் வாங்கப் போவதில்லை. அப்படியிருக்க, ஒரு மாதம் அல்ல, ஒரு வருஷமானுல் கூட அது இந்த இடத்தைவிட்டு நகராது” என்று தோன்றியது அவனுக்கு. யோசனை செய்யாமல் மடியிலிருந்த நெக்லேஸை அந்தக் குழாயினுள் மெல்லப் போட்டான். மறு நிமிஷம் ‘டக்’ கென்று பெட்டிக்குள் விழுந்த சப்தம் கேட்டது. அவன் மனத்தில் நிம்மதி ஏற்பட்டது. திருப்திக்கு அடையாளமாக ஒரு பெருமூச்சு எழுந்தது. வாசலை நோக்கி நடந்தான்.

அவனுடைய வரவை எதிர் நோக்கி இருந்த வி. ஐ. டி. கண்ணுயிரத்தைக் கண்டதும், அவன் தோளின் மேல் கையைப் போட்டுக்கொண்டு, சகஜமாகப் பேசிக்கொண்டே நடந்தான்.

*　　*　　*

மறுநாள் அவனுடைய முந்தைய சிறிய திருட்டுக்கு ஒரு மாதம் தண்டனை கிடைத்தது. அந்த ஒரு மாதமும், ஒரு யுகமாக இருந்தது அவனுக்கு. அவன் ஞாபகமெல்லாம் ஏலக் கம்பெனியின் கிராமபோன் மீதேயிருந்தது. நாட்களை எண்ணித் தவித்துக் கொண்டிருந்தான் கண்ணுயிரம்.

தண்டனை முடிந்தது.. விடுதலை!

அவனுக்குப் பசியில்லை, தாகமில்லை. கடைத்தெருவை நோக்கி நடந்தான். ‘பரமதயாளன் அண்கோ’ கண்ணில் பட்ட பிறகுதான், அவன் பரபரப்புச் சிறிது அடங்கியது. வேகமாக உள்ளே நுழைந்தான். படபடக்கும் நெஞ்சுடன் அங்குமிங்கும் தேடினுன். பலமுறை சுற்றிச் சுற்றி வந்தான். ‘பக்’கென்றது.

கிராமபோனைக் காணும்!

தனது எதிர்கால நம்பிக்கையான அந்தக் கிராமபோன் - தனது உயிரையே வைத்திருந்த அந்தப் பெட்டி—போய்விட்டது என்பதைப் பார்க்க அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்த ஏலக் கம்பெனிக்காரனை அப்படியே பஸ்மீகரம் செய்து விடக்கூடிய அளவுக்கு ஆத்திரம் அலை மோதியது. ஆனுல் தன் ‘குட்டு’ வெளிப்பட்டுவிடும் என்ற நினைவு வரவே அடக்கிக் கொண்டான். சுலபத்தில் அதை இழந்துவிட அவன் மனம் சம்மதிக்கவில்லை. மூளையைக் குழப்பிக்கொண்டு யோசனையில் முனைந்தான். அந்தப் பெட்டியை வாங்கியவர்களைக் கண்டுபிடித்து, அங்கே போய் ஏதாவது சொல்லி, அவர்களிடமிருந்து ‘தட்டிக் கொண்டு’ வந்துவிட்டால்....

அதுவே சரி எனப்பட்டது அவனுக்கு. குமாஸ்தாவை நெருங்கினுன்.

“ஏன் ஐயா! அந்தப் பழைய கிராமபோன் பெட்டி எங்கே என்று மெதுவாகப் பேச்சைத் துவக்கினுன் கண்ணுயிரம்.

“ஏன், அங்கே இல்லையா? அப்போ விற்றிருக்கும்...” அசிரத்தையாகப் பதிலளித்தான் குமாஸ்தா. கண்ணுயிரத்திற்குப் பற்றிக் கொண்டு வந்தது கோபம்.

“அட பாவி! வித்துட்டியா..?”

"அந்த ஹைதர் காலத்து ஓட்டை ஒழிஞ்சுதேன்னு சந்தோஷப் படறோம். நீ என்னடான்னா.. ஏன், உனக்கு அது வேணுமா?"

"வேணுமாவா, அதுக்காகத்தானே ஓடியாந்தேன்."

"அப்பவே எடுத்துக் கிட்டுப்போய்த் தொலையறது தானே! நாங்களும் இடம் ஒழியுதேன்னு சந்தோஷமாத் தள்ளி விட்டிருப்போமே. போனாப் போவுது; இனிமே ஏதாவது அந்த மாதிரி வந்தா, ரிசர்வ் பண்ணி வைக்கிறேன்."

கண்ணாயிரத்தின் கண்கள் கனலைக் கக்கின. "அது போகட்டும், ஐயா! அந்தப் பெட்டியை யாருக்கு விற்றீர்களென்று கொஞ்சம் சொல்லுங்களேன்" என்று கெஞ்சினான் கண்ணாயிரம்.

முணுமுணுத்துக் கொண்டே ஒரு பழைய நோட்டுப் புத்தக ஏடுகளைப் புரட்டினான் குமாஸ்தா. "அம்புஜம்மாள், 10-ஆவது தெரு 20-ஆம் நெம்பர் வீடு, காந்திநகர்.. இதானப்பா விலாசம்...."

குமாஸ்தா முடிப்பதற்குள்ளாகவே வெளியே பாய்ந்தான் கண்ணாயிரம். அவன் மனத்தில் ஒரு மூலையில் நம்பிக்கை பிறந்தது: 'ஸ்திரீ தானே, எப்படியாவது வாங்கிவிடலாம். பலிக்காவிட்டால், அவர்கள் வாங்கினவிலையை விட ஒன்றிரண்டு அதிகம் கொடுத்தால் மாட்டேன் என்றா சொல்லப் போகிறார்கள்?' யோசனை முடிதற்குள் காந்திநகர் வந்துவிட்டது.

மனத்தில் தோன்றிய நம்பிக்கையின் காரணத்தால் குஷியாகத்தான் சென்றான் கண்ணாயிரம். தெருவைக் கண்டுபிடித்து நம்பர்களைக் கவனித்துக்கொண்டே வந்தான். 20-ஆம் நெம்பர் கண்ணில் பட்டது. பெரிய பங்களா. கேட்டை லேசாக நீக்கிக்கொண்டு, உள்ளே நடந்தான்.

"ஏய், யாரது?" என்ற அதட்டலைக் கேட்கவும், திரும்பிப் பார்த்தான் அவன். தூக்கிவாரிப் போட்டது. ஒரு போலீஸ்காரன் மரத்தடியிலிருந்து அவனை நோக்கி வந்தான். ஒரு நிமிஷத்திற்குள் ஒன்றும் புரியாமல் எல்லாம் குழம்பி மயக்கம் வந்துவிடும்போல் இருந்தது, கண்ணாயிரத்திற்கு.

"இது....இது யார் வீடு அண்ணே..?"—உளறிக்கொட்டினன் கண்ணாயிரம்.

"உம்..போலீஸ் இன்ஸ்பெக்டர் வீடு..என்? எங்கே வந்தே நீ?" என்று அடுக்கிக்கொண்டே போனான் போலீஸ்காரன்.

"இல்லே, 20-ஆம் தெருவிலே 10-ம் நெம்பர் வீட்டிலே என் மச்சான் வேலை செய்யறான். அவனைப் பார்க்க வந்தேன்..."

"இது 10-ஆம் தெரு, 20-ஆம் நெம்பர்..20-ம் தெரு அந்தக் கடைசியிலே இருக்கு..போ."

'தப்பினோம் பிழைத்தோம்' என்று வெளியேறினான் கண்ணாயிரம். 'அந்தப் போலீஸ்காரன் புதியவன். இல்லாவிட்டால் அவ்வளவு லேசாகத் தன்னை விட்டிருப்பானா?' என்று நினைத்துக் கொண்டான்.

அந்த கேட்டைத் தாண்டி வெகு தூரம் வந்தபிறகுதான் நல்ல மூச்சு வந்தது. தனது அதிர்ஷ்டத்தை நினைத்ததும் அழுகை அழுகையாக வந்தது. ஓரிடத்தில் உட்கார்ந்து ஒருவாறு சமாதானமடைந்ததும், துண்டை உதறித் தலையில் போட்டுக்கொண்டு, தனது வழக்கமான 'வேலை'க்குக் கடைத்தெருவை நோக்கி நடக்கத் தொடங்கினான் கண்ணாயிரம்.

போக்கிரிக் கண்ணன்

கண்ணனைக் கண்டால் எல்லாருக்கும் ரொம்பவும் பிடிக்கும். குறும்புத்தனத்தினாலேயே உருவாகிய அவன் மிகுந்த புத்திசாலியாகவும் இருந்தான்.

ஒரு சமயம் எங்கள் வீட்டிற்கு எங்கள் அத்திம்பேர் வந்திருந்தார். அவரை நாங்கள் அன்று எதிர்பார்க்கவில்லை. அத்திம்பேரும் வந்ததும் கண்ணனைத் தான் விசாரித்தார். பிறகு சாப்பிட்டுவிட்டுப் படுத்தவர் அசதியில் தூங்கிவிட்டார். இடைவேளையில் பள்ளியிலிருந்து வந்த கண்ணன் இந்தச் சமாசாரத்தை அறிந்து குதூகலமடைந்தான்.

ஒரு பாட்டி அத்திம்பேர் படுத்திருக்கும் இடத்திற்குப் போய் அக்கறையாக, "என்ன, மாப்பிள்ளை சௌக்யந்தானே? எப்பொழுது ஊரிலிருந்து வந்தீர்கள்?" என்று விசாரித்தாள்.

அத்திம்பேரும் மரியாதையுடன் எழுந்து உட்கார்ந்து கொண்டு, "பகவானின் அருளினால் எல்லாரும் சௌக்கியந்தான். தாங்கள் யார் என்றுஎனக்குத் தெரியவில்லையே!" என்றார்.

அந்தச் சமயம் என் தந்தை வந்தார். "என்னடா, கண்ணா, உன் குறும்புத்தனத்தை அத்திம்பேரிடமும் காண்பிக்க ஆரம்பித்து விட்டாயா?" என்று காதைப் பிடித்து நன்றாகத் திருகினார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த நாங்கள் யாவரும் கொல்லென்று சிரித்துவிட்டோம்.

அத்திம்பேர் முகத்தில் அசடு வழிந்தது.

கண்ணனும் தன் பாட்டி வேஷத்தைக் கலைத்துவிட்டு இடி இடியென்று சிரித்தான்.

—லக்ஷ்மி சங்கர்.

மனித குணம்

— சங்கர சுப்பு —

'மாராட்டா லெதர் ஒர்க்ஸ்' என்று ஆள் உயர அளவு கொட்டை எழுத்துக்களில் எழுதியிருந்த பலகையைத் தாங்கியிருந்த கடைக்குள் நானும் என் சிற்றப்பாவும் நுழைந்தோம். கடை வாசலில் கடைக்கு விஜயம் செய்பவரை வரவேற்க ஆறடி உயரமும் ஓர் அடி அகலமும் கொண்ட ஒரு ஜோடி ராட்சத மரச் செருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

கடைக்குள், வரிசைக்கு டஜன் நாற்காலிகள் வீதம் நாலு வரிசைகள். நாங்கள் நாற்காலியில் உட்காரு முன்பே ஒரு சிறுவன் எங்களை அணுகி, "வாருங்கள் ஸார்! உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"செருப்புக் கடையில் செந்தூரமா வாங்க வருவார்கள், தம்பி?" என்று ஹாஸ்யமாகப் பேசுவதாக நினைத்து விஷமமாகக் கேட்டார் என் சிற்றப்பா.

"செருப்புக் கடையில் செருப்புத்தான் வாங்க வருவார்கள், ஸார். ஆனால் செருப்புக் கடையில் 'செருப்பு' மாத்திரமல்ல, 'ஷூஸ்' 'சாண்டல்ஸ்' 'ஆப்ஷூஸ்' 'பத்தான் சிலிப்பர்' எல்லாம் கிடைக்கும். அவைகளில் உங்களுக்கு எது வேண்டும்?"

"கெட்டிக்காரனா இருக்கிறாயே! எனக்கு 'ஷூஸ்' தான் வேண்டும்."

"உங்களுக்கு மாத்திரமா? ஸாருக்குக்கூடவா?"

"ஸார், 'ஷூஸ்' போடுவதில்லை. எனக்கு மாத்திரம்தான்."

"பிளாக்கா, பிரௌனா? கிரேப்ஸோலா, லெதர் ஸோலா?"

"எல்லாத்தையும் தான் கொண்டுவாயேன், பார்க்கலாம்."

"சரிங்க, ஸார்" என்று வேகமாகச் சென்றவன் ஒரு சிறிய ஏணியை எடுத்துப் போட்டுக்கொண்டு, லாகவமாக ஒரு தாவுத் தாவி ஓர் அலமாரியிலிருந்து எழெட்டு அட்டைப் பெட்டிகளை எடுத்துவந்தான்.

"பீல்ஜி, கொஞ்சம் 'டையின் ஸ்டூ'லை எடு" என்றான் பையன். இன்னொரு சிறுவன் ஒரு சிறிய ஸ்டூலை எடுத்துவந்தான்.

"பாருங்க, ஸார்" எல்லாப் பெட்டிகளில் இருந்த பூட்ஸுகளையும் எடுத்து வெளியில் பரத்தினான்.

"'கிரேப் ஸோல்' வேண்டாமப்பா. அதை அணிந்து கொண்டால் எப்போது வழுக்கி விழுவோம் என்று தெரியாது."

"ஆமாம், 'லெதர்' தான் எந்த 'வெத'ருக்கும் சரி. ஆனா 'கிரேப்' தான் இப்போ 'பான்ஸி'. காலைத் தூக்கி இதுமேலே வையுங்க."

என் சிறிய தகப்பனாரின் காலைப் பூட்ஸுவயிற்றினுள் திணித்தான்.

"அப்பா! மெதுவாகத் தம்பி, கால் ஜாக்கிரதை. ரொம்பப் பிடிக்கிறதே, சின்ன 'சைஸ்'ஸோ?"

"இல்லே சார், இதுதான் சரியானது. முதல்லே இப்படித்தான் பிடிக்கிறாப்போலிருக்கும். இரண்டு நாள் உபயோகித்தால் சரியாகிவிடும்."

"எம்பா, கால் சுண்டுவிரல் செத்துப் போய்விடும்போலிருக்கே. முதல்லே காலைவிட்டுப் பூட்ஸைக் கழற்று."

பூட்ஸைப் புகுத்தின சிரமத்தோடு கழற்றினன்.

"அப்பா!" என் சிற்றப்பா சுண்டுவிரலைத் தடவிக் கொடுத்தார். அதன் மேல் முழுவதுமே வெப்பு வியாபித்திருந்தது.

"இதற்கு அடுத்த அளவு பூட்ஸை எடு."

"இல்லை, இதுதான் சரியான அளவு ஸார். இதற்கு அடுத்த 'சைஸ்' உங்கள் காலுக்கு ரொம்பப் பெரிதாயிருக்கும்."

"அப்படீன்ன, இதுதான் சரியான அளவு என்கிறயா?" கீழிருந்த பூட்ஸைக் கையிலெடுத்து அதைத் திருப்பித் திருப்பிப் பரிசோதித்துப் பார்த்தார்.

"பையன்! இதன் உருவம் ஒன்றுகயில்லையே? வேறு எடு" என்ருர் சிற்றப்பா.

வியாபாரம் நடந்துவிடும் என்ற சந்தோஷத்துடன் இன்னும் நாலைந்து பெட்டிகளைத் தாங்கிவந்தான் அந்தச் சிறுவன். அவை

த/1788

களையும் ஒவ்வொன்ருகக் கூர்ந்து பார்த்துவிட்டுக் காலில் அணிந்து கொண்டும் பார்த்தார்.

"சுண்டு விரல் விண்டுபோய் விடும் போலிருக்கிறதே. பூட்ஸு கோணலாய் இருக்கிறது. 'ஷேப்' நன்ருக யில்லையப்பா."

"பூட்ஸுன்னு அப்படித்தான் இருக்கும், ஸார்!"

"என்னது? அப்படித்தான் இருக்கும்என்கிருயா! எப்படியிருந்தாலும் நான் வாங்கிக்கொண்டு போகவேண்டும் என்கிருயா?"

"இல்லே, ஸார், உங்களுக்குப் பிடிச்சா பாருங்கோ, இல்லேன்னு ....!. இவ்வளவு ஜதைகள் எடுத்துப் போட்டிருக்கேன்..."

"இவ்வளவு எடுத்துப் போட்டிருக்கேன்னு அலுத்துக்கிட்டா முடியுமா? சும்மா இல்லே தம்பி, வியாபாரம்! இக்கேபார், நல்லதா பார்த்து ஒன்று எடு. எல்லாம், பாதத்துக்கிட்டே கோணலா யிருக்கு."

"ஷூஸ்ன்னு இப்படித்தான் ஸார் இருக்கும். எங்க முதலாளியும் போன முப்பது வருஷமா கடை நடத்ருரு. உங்க காலு தான் செத்தே ஒரு மாதிரி..நீங்க அளவு கொடுத்துவிட்டுப் போங்களேன். தயார் பண்ணித் தரச் சொல்கிறேன்."

"வாட்! என் கால் கோணலா? அதிகப்பிரசங்கி! நீ யாரு, நான் யாரு? ஏழைக் குறும்பு. உனக்கு என்ன தைரியமடா, என் காலு கோணல் என்று சொல்ல? உன் பூட்ஸு கோணல்னு என் காலையா கோணல் என்கிருய்?"

"பின்ன என்ன ஸார்? நீங்க பூட்ஸைக் கோணல் என்னலாம்; நாங்கள் உங்கள் காலைக் கோணல் என்ன மாட்டோமா?"

"டேய் பார்த்துப் பேசு! உதைத் துப்புடுவேன் பல்லே. 'யூ இன் ஸிக்னிஃபிகண்ட் இம்ப்'. உன் பூட்ஸுத்தோலைஎப்படி வேணுமானுலும் மாத்தி அமைச்சுக்கலாம். என்னைப் பெத்தவகூடக் 'கால் அப்படி யிருக்கு, இப்படி இருக்கு' என்று சொன்னதில்லே. இம்..." என் சிற்றப்பாவின் கண்களில் கோபம் பறந்தது.

'டேய் வா, போகலாம்" என்று சொல்லிக்கொண்டே நாற்காலியை விட்டு எழுந்தார். நானும் அவரைப் பின் தொடர்ந்தேன்.

கடை வாசலில் கல்லாப்பெட்டியில் முதலாளி உட்கார்ந்திருந்தார். "என்ன, ஸார்! ஒண்ணும் வாங்கலியா?"

"வாங்கவா? நான் நேரே கொல்லன் பட்டறைக்குப் போகிறேன். அங்கே போய் என் காலைச் சரிசெய்துகொண்டு வருகிறேன்."

"என்னங்க ஸார், கோபம்?"

"உங்க பையன் என் கால் கோணலாக இருக்கிறது என்கிருன். இது மாதிரி பையன்களைக் கடையில் வைத்துக்கொண்டால் நல்ல வியாபாரம் நடக்கும். நீங்களே கூடப் பட்டறை ஒன்று நடத்துங்கள். வர்றவங்க கால்களை யெல்லாம் உங்க பையன் சரியில்லை என்பான். தட்டி நீட்டி உங்க கடைப் பூட்ஸு கொள்ளும் அளவுக்குச் சரி பண்ணிக்கலாம்."

"யார்டா அவன்?"

அந்தப் பையன் கையில் ஒரு ஜதை பூட்ஸுகளுடன் வந்தான்.

"என்னடாது?"

"நம்ம கடை பூட்ஸு பூட்ஸா இல்லேங்கருரு. அவரு காலு

தான் சரியில்லைங்க. 'அளவு கொடுங்க; தயார் பண்ணிவைக்கிறேன்'ன்னு சொன்னேன். அவ்வளதான். அதுக்கு இவரு குதிச்சாரு."

"பார்த்தீர்களா, பயல் சமர்த்தை! அள்ளி அணைச்சுக்குங்க, 'வாய்ச்சயேடா எனக்கு அதிமதுரம்'ன்னு. இன்னும் இவன் மாதிரி நாலு டஜன் பையன்களை அமர்த்திக்கும், வியாபாரம் அமோகமா நடக்கும்."

"ஏ கழுதை! என்னடாது?"

"என்ன, பாஸ் (Boss), அவரு காலு அவருக்கு எவ்வளவு பெரிசோ அவ்வளவு பெரிசு நமக்கு நம்ம சரக்கு. பூட்ஸூ நம்ம குழந்தைபோல. அதைப் பண்ணறவன் சிரமம் இவருக்குத் தெரியுமா?"

"அடிச்சேன் தெரியுமா? வெளியிலே நடடா முதல்லே. காலையிலே வந்து கணக்குத் தீர்த்துண்டு போ" என்று பையனைப் பார்த்துப் புறங்கையை ஓங்கிக்கொண்டே சொல்லிவிட்டு, "நீங்க உள்ளே போய்ப் பிடிச்சதை எடுத்துக்குங்க, ஸார். டேய், லே லே" என்றார்.

"இல்லை, எனக்கு நேரமாய் விட்டது. நாளைக்கு வர்றேன்."

"செய்யுங்க."

* * *

வெளியில் வீதியில் நடந்துகொண்டிருந்தோம். என் சிற்றப்பா உறுமலுடன் முனகினார். "என் காலா சரியாயில்லை? அவன் தலையெழுத்துன்னு இன்னிக்குச் சரியில்லை? துடுக்குப் பையன்."

"உங்களாலே அவன் வேலை போய்விட்டது" என்று நான் வருத்தத்துடன் சொன்னேன்.

"வேணும், இந்த மாதிரிப் பசங்களுக்கு நாலு இடத்துலே பட்டாத்தான் தெரியும்."

"உஹூம்.... அப்படியா?"

இருள் இறங்கி இறுகிக்கொண்டிருந்தது. தெருக்கடை விளக்குகள் ஒளியைப் பெருக்கிக்கொண்டிருந்தன.

நானும் என் சிறிய தகப்பனாரும் வீடு வந்து சேர வண்டி பிடித்தோம். வழியெல்லாம் நான் அவருடன் பேசாது இருந்தேன். அவர் செருப்புக் கடைப் பையனிடம் வஞ்சம் தீர்த்துக்கொண்டது எனக்குப் பொறுக்கவில்லை. நியாயமாய்ப் படவில்லை.

'ஜயா'

அந்த ஊரில் ஒரு கருமி இருந்தான். கருமி என்றால் கொஞ்ச நஞ்சமல்ல. எச்சில் கையால் காக்காய் ஓட்டமாட்டான் என்று சொல்வார்களே, இவன் ஈயைக்கூட ஓட்டமாட்டான். ஒரு நாள், இவனைவிடக் கஞ்சனாகப் பக்கத்து ஊரில் இன்னொருவன் இருக்கும் செய்தி காதுக்கு எட்டியது. இந்த இரண்டாவது மகாநுபாவன் கருமித்தனத்தை மற்றவர்களுக்குச் சொல்லி வேறு கொடுப்பானாம். இதைக் கேட்டவுடன் முதல் கருமிக்கு அவனிடமிருந்து சாமர்த்தியமாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

தானே நேரில் போனால் செலவு அதிகமாகிவிடுமோ என்று பயம். பிள்ளையைக் கூப்பிட்டான். அவனிடம், பக்கத்து ஊரில் இருக்கும் குருவிடம் போய், சிக்கன சாஸ்திரத்தில், 'டிக்ரி' வாங்கி வரச் சொல்லிக் கட்டளையிட்டான். ஆனால் குருவுக்குத் தட்சிணை வைக்க வேண்டுமே என்று யோசித்தான். பையனிடம் ஒரு தம்பிடியைக் கொடுத்து அதற்குக் காகிதம் வாங்கி வரச் சொல்லி அனுப்பினான். அப்பனுக்கு ஒரு படி மேலே பிள்ளை. மலிவாக அகப்பட்டது என்று பழைய காகிதங்கள் இரண்டு வாங்கி வந்தான். தகப்பனுக்கு ஒரே பெருமை. ஒரு காகிதத்தை உள்ளே வைத்துவிட்டு மற்றொன்றை இரண்டாகக் கிழித்தான். ஒரு பாதியில் தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு வைத்திருப்பது போல ஒரு படமும், மற்றொன்றில் இரண்டு சவரன்களின் படமும் வரைந்தான். வழக்கமாகக் குருவுக்குக் கொடுக்கப்பட்டு வரும் காணிக்கை அதுதானே! பிறகு இந்த இரண்டு துண்டுக் கடிதங்களையும் ஒரு கூடையில் வைத்து, அதை ஒரு

தடுக்கால் மூடி, பையனுக்கும் வேண்டியமட்டும் புத்திமதி சொல்லி அனுப்பி வைத்தான்.

பையன் அதிர்ஷ்டம் அவன் வந்து சேர்ந்த வேளையில் அந்தக் கருமியின் மகன்தான் வீட்டில் இருந்தான். கூடையை வாங்கி, உள்ளே படம் வரைந்திருந்த காகிதங்களை எடுத்துப் பார்த்தான். மிகவும் கோபம் வந்தது. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்று சொல்வார்களே அது மாதிரி, இந்தச் சிறுவனும் லேசுபட்டவன் அல்ல. சாமர்த்தியமாக ஆத்திரத்தை அடக்கிக்கொண்டான். வந்த பையனுடன் கொஞ்ச நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்துவிட்டு மெள்ள, ''அப்பா வர ரொம்ப நேரமாகும். இருட்டுவதற்குள் நீ வீடு போய்ச் சேர வேண்டும்'' என்று விடை கொடுத்தான். பதில் மரியாதை செய்ய வேண்டுமே! அதற்காகச் சீப்பிலிருந்து இரண்டு வாழைப்பழங்களைப் பிய்ப்பது போல் பாவனை செய்து, அதைக் கூடையில் வைப்பது போல் சைகைகள் காட்டினான். பிறகு கூடையைத் தடுக்கால் மூடி, வந்தவனுக்கு வந்தனம் தெரிவித்து, வீட்டுக்கு அனுப்பி விட்டான்.

சாயந்தரம் ஆனதும் மகா கருமி வீட்டிற்குத் திரும்பினார். வாசலிலேயே பையன் அவரை எதிர்கொண்டழைத்துத் தன் பிரதாபங்களை அளக்க ஆரம்பித்தான். சிஷ்யப்பிள்ளை அவரைத் தேடி வந்தது, காணிக்கையாக அவன் காகிதம் கொண்டு வந்தது, தான் அவனுடன் பேசினது, எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான்.

கோபு: ராமு நான் இனிமேல் சத்தியமே செய்யப் போவதில்லை. அது ரொம்பவும் தப்புடா.
ராமு: நிஜமாகவா!
கோபு: சத்தியமா! —அ.

பிறகு சிரித்துக்கொண்டே, தான் உயரேயிருந்து சீப்பை எடுப்பது போல் பாவனை செய்து, வாழைப்பழத்தைப் பிய்ப்பதற்காகக் கையை உயர்த்தியதையும் முன் போலவே அபிநயத்தில் காண்பித்தான்.

அதைப் பார்த்தும் அப்பாவுக்கு மகா கோபம் வந்து விட்டது. பிள்ளையை 'வெளுவெளு' வென்று வெளுத்து விட்டார். ''என்னப்பா, இதில் என்ன தப்பு?'' என்று பிள்ளை கதறினன். ''ஊதாரிப்பயலே, இப்படியா செய்வது? இரண்டு சவரன்கள் படத்துக்கு அவ்வளவு பெரிய பழங்களை வைப்பது போலவா கையைக் காண்பிப்பது? சற்றுக் குறுக்கி, விரல்களை அவ்வளவு நகர்த்தாமல் இருக்கக் கூடாதா! நீ எப்போது தான் செட்டாயிருக்கக் கற்றுக் கொள்ளப் போகிறுயோ?'' என்று கடிந்து கொண்டார்.

பாலகுமார்
கதை: ஆர்வி — சித்திரம்: ஸாமி
வெளியே கதவை
க் கொக்கி போட்டு
விடுகிறேன்!
இதே சமயத்தில்........
சர்க்கஸ் கூடாரத்துக்கு சென்றதும்..
டைகர்! இனி
உஷாராக இரு!
வா, பின்னால்!
ஜாக்கிரதை!
உள்ளே
போகக்
கூடாது!
மானேஜர்
எங்கே? உள்ளே
போய்ச் சொல்!
ஆள் ஒரு நாய் கொண்
டுவந்திருக்கிறார். அதிகாரமாய்ப்
பேசுகிறார்.
டேய்! நான் கூப்பி
டும் போது இரண்டு
ஆட்களுடன் வா!
போய், அந்த ஆஜா
வாச் சொல்!
வாங்க ஸார்!
எங்கே வந்தீங்க!
இப்போது!
இந்தச் செயினைக்
கொடுத்துட்டுப்
போகலாம்னு
வந்தேன்!
முதலில் அந்த
நாயை இப்படிக்
கட்டுங்கள்! உம்
.. ஜல்தி!!
யாரங்கே?
உத்தரவுங்க
பிடித்துக்
கட்டுங்கள்
இவனை!!

டைகர்_ உம்.. ரெடி!
ஹா!! ஐய்யோ!!!
இவர்கள் போகா விட்டால் உன்னைச்சுட் டுத்தள்ளிவிடுவேன். போகச்சொல்!
உம், இன்னும் ஏன் பேசாமல் இருக்கிறாய்! சீக்கிரமாகட்டும்!
நீங்கள் இருவரும் அப்பால் போங்கள்!
அடுத்த கணம்.............
டைகர்! ரன்அப்! அவனை விட்டு விடு!
இவனையும் பக்கத்து அறையில் கொண்டுபோய் அடையுங்கள்!
உம்... அம்மா.. .. அப்பா....
செல்லம்மாளின் குரல் போலிருக்கிறதே!
தொடரும்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(R) 469. ராதாபாய், சீனிவாசன், S., வில்லிவாக்கம். 470. ராமசந்திரன், புதுச்சேரி. 471. ராமசந்திரன், M., கேத்துறை, சிலோன். 472. ராதாகிருஷ்ணன், R., சத்திரரெட்டியாப்பட்டி. 473. ரங்ககிருஷ்ணன், K. S., பம்பாய்-19. 474. ராகவன், S., வடிவீஸ்வரம். 475. ராமலிங்கம், E., பேட்டை. 476. ராமகிருஷ்ணன், K. V., பெங்களூர். 477. ரங்கநாதன், V. S., சென்னை-2. 478. ராமசாமி, S., பெரியகுளம். 479. ராமநாதன், G., பரூர். 480. ராதாகிருஷ்ணன், M. N., கோயம்புத்தூர். 481. ராமசாமி, S., கண்டி. 482. ராமசுப்பிரமணியன், N., களக்காடு. 483. ராமநாதன், S., நாக்பூர். 484. ராமசந்திரன், V., (விலாசம் எழுதவில்லை). 485. ராமமூர்த்தி, V., ஈரோடு. 486. ராமகிருஷ்ணன், P., திருச்சிராப்பள்ளி. 487. ராதாகிருஷ்ணன், R., மதுரை. 488. ராம், சுபா, சித்தூர். 489. ரங்கசாமி, S. M., சங்ககிரி. 490. ராஜரத்தினம், T., கொடுமுடி.

(S) 752. சண்முக குமாரசாமி, V. R., பாளையங்கோட்டை. 753. சரஸ்வதி, P., தூத்துக்குடி. 754. சீனிவாசன், பிரேமா, சுசீலா, வில்லிவாக்கம். 755. சர்மா, S. G., சிலோன். 756. செல்வராஜு, S., மேட்டுப்பாளையம். 757. சாந்தகுமாரி, N., புதுச்சேரி. 758. சங்கரன், S. C., மேலூர், 759. சாரதா, M., திண்டுக்கல். 760. சீனிவாசமூர்த்தி, R., மேட்டுப்பாளையம். 761. சுந்தரம், R., பாளையங்கோட்டை. 762. சண்முகம், திருநாவுக்கரசு, ஆறுமுகம், P. K., சென்னை -1. 763. சங்கரன், குருசாமி, S. M., சங்கரன் கோயில். 764. ஸ்ரீராமுலு, T., கோயம்புத்தூர். 765. சுப்பிரமணியன், N., மதுரை. 766. சுந்தரராமன், V., அய்யாடி மங்கலம். 767. சலாவுதீன். V., சங்கரிதுர்க்கம். 768. சுல்தான், அப்துல்காதர், A. M., ஆயர்பாடி. 769. சீதாராமன், S., மேற்கு மாம்பலம். 770. சேஷாத்திரி,

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி....................

(தேதி, மாதம், வருஷம்)

பிப். 1-'54 கூபன் நெ:

T. S., பொன்னேரி. 771. சீனிவாசன், ரங்கராஜன், R., முசிரி. 772. சிவகாசி, S. G., சென்னை-21. 773. சிவலிங்கம், K. M., தாரனும்பேட்டை. 774. சீதாராமன், K. J., சென்னை-17. 775. சுந்தரம், கோயம்புத்தூர். 776. சங்கரன், T. R., புனு. 777. சாந்தா, சந்தானம், பிரகாசம், நாகராஜன், P. R., ஆலங்காயம். 778. சாந்தா - மீனுக்ஷி, சென்னை-14. 779. சுப்பிரமணியன், விசுவநாதன். R., சென்னை-1. 780. சுந்தரம். A., தர்மபுரி. 781. சட்டையப்பன், V., சிங்கப்பூர். 782. சீனிவாசன், V. R., சென்னை-11. 783. சுப்பையா, A., திருநெல்வேலி. 784. சீனிவாசன், S., தஞ்சாவூர். 785. சாமி, K. S. A., சென்னை-6. 786. சண்முகம், பாரா, மலாயா.

★★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய மாதத்துக் கூபன்களும்தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★★

787. சரசா, T. K., திருவள்ளூர். 788. சேஷா, G. V., காவேரிப்பட்டணம். 789. சக்குபாய், T. A., தாரமங்கலம். 790. சுலோசனு, R., பல்லாவூர். 791. சீனிவாசன், கண்ணன், L., திண்டுக்கல். 792. சங்கரன், R., சென்னை-4. 793. சோமசுந்தரம், N., சீகாழி. 794. சீனிவாசன், A., பாபநாசம். 795. சாகுல் ஹமீத், N., செங்கோட்டை. 796. சுப்பிரமணியன், ஜயராமன், பாஸ்கரன், R., சிவகங்கை. 798. சரஸ்வதி, P., கோயம்புத்தூர். 799. சரோஜா, புவனேஸ்வரன், R. P., ராசிபுரம். 800. சோமசுந்தரம், P., தேவகோட்டை. 802. சுந்தரேசன், P., கருப்பத்தூர். 803. சாந்தா, லக்ஷ்மி, N., புதுடில்லி. 804. சரஸ்வதி, லக்ஷ்மிநாராயணன், V, புதூர். 805. சர்மா, M. C., காரைநகர். 806. சந்தானம், பிரேமா, C. J., புதுடில்லி. 807. சியாமராஜன், கார்த்திகேயன், R., சென்னை-4. 808. சுகிர்தராஜு, R., சிலோன். 809. சுப்பராயன், K. S., சென்னை-4. 811. சேகர் ரஞ்ச், தேவராஜ், C. A., கூனூர். 812. சாரங்கன், V., உப்பிலியப்பன்கோயில். 813 சேதுபார்வதி. சென்னை-14 815. சலீம் N. J., கம்பளை, சிலோன். 816. ஷாஜா முகமது, A. M. K., ஏர்வாடி. 817. சண்முகம், T., ஆண்டிப்பட்டி. 818. சண்முகரத்தினம், P., யாழ்ப்பாணம். 819. சுந்தரராஜன், கோவிந்தராஜன், V., சேலம். 820. சிவநேச செல்வன், A., சிலோன். 821. சீனிவாசன், V.R., திருச்சி.

(மீதி அடுத்த இதழில் வரும்)

அசட்டுப் பிச்சு

ஆர்வி

மறுநாள் பொழுது விடிந்ததும் இன்ஸ்பெக்டர் குரூப் மாடிக்கு வந்தார். மாடி அறையில்தான் பிச்சு படுத்துக்கொண்டிருந்தான். முதல் நாள் முழுவதும் அலைந்த களைப்பினால் பிச்சு அடித்துப் போட்டது போல் தூங்கினான்.

குரூப் அவனை மெதுவாக எழுப்பிப் பார்த்தார். ''பொழுது விடிந்து விட்டது, தம்பீ!'' என்று இரண்டு மூன்று தடவை சொல்லிப் பார்த்தார். அப்படியும் அவன் எழுந்திருக்கும் வழியாகத் தெரியவில்லை. அதனால் அவன் தலையை அசைத்துப் புரட்டினார். தலைமாட்டில் ஏதோ மொடமொடவென்று காகிதத்தின் சத்தம் கேட்டது. குரூப் அது என்ன காகிதம் என்று தலையணையைத் தூக்கிப் பார்த்தார். அங்கே ஒன்றரையணா உள் நாட்டுத் தபால் ஒன்று கிடந்தது.

குரூப் அதைக் கையில் எடுத்து அதில் எழுதியிருந்த விலாசத்தைப் பார்த்தார். 'பங்காரு, போஸ்ட் மாஸ்டர் மேல் பார்வை, சென்னை' என்று எழுதியிருந்தது.

உடனே அவசரமாக உட்புறம் திருப்பி அடியில் உள்ள கையெழுத்தைப் பார்த்தார். 'செல்லமுத்து' என்று இருந்தது.

இந்தக் கடிதம் எங்கே பிச்சுவுக்குக் கிடைத்தது என்று அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. 'பயல் எமகாதகப் பயல்! எப்படியோ நமக்குத் தெரியாத விதமாய் இவன் உளவுகளைக் கண்டு பிடித்து விடுகிறானே!' என்று எண்ணிக்கொண்டே அந்தக் கடிதம் முழுவதையும் படித்தார். ரங்கூனிலிருந்து வந்திருக்கும் ஆளுக்கு உதவி செய்ய வருவதாகச் செல்லமுத்து எழுதியிருந்த கடிதம் தான் அது. அவர்கள் பழைய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றும், வைரக் கற்களைக் கொண்டு வரவே பங்காருவும் அவன் தோழனும் ரங்கூன் போயிருப்பதாகவும் அதிலிருந்து தெரிய வந்தன. செல்லமுத்து, தன் நண்பனும் தலைவனுமான ஏழுமலை கொள்ளிடக்கரையில் அகப்பட்டுக்கொண்டு விட்டான் என்பதைக்கூட ஜாடையாகத் தெரிவித்திருந்தான். இதெல்லாம் இப்பொழுதுதான் இன்ஸ்பெக்டர் குரூப்புக்குத் தெளிவாயின.

அந்தப் பெட்டியில் பல லக்ஷ ரூபாய்கள் பெறுமான முள்ள

வைரக் கற்கள் இருந்தன. பங்காருவினால் தனியாக அந்தப் பெட்டியைத் துறைமுகத்திலிருந்து எப்படி வெளியேற்றிக் கொண்டு வரமுடியும்? கூடவே தங்கராசு என்ற தோழன் இருந்தாலும் வெளி ஆள் ஒருவனுடைய உதவி தேவைப்பட்டது. இதற்காகவே அவன் செல்லமுத்துவுக்குக் கடிதம் எழுதி யிருந்தான். செல்லமுத்தவும் உடனே வருவதாகப் பதில் எழுதியிருந்தான். அந்தக் கடிதமே இது. அதை முதல் நாள் இன்ஸ்பெக்டர் வீட்டிலிருந்து பிரயாண அநுமதிச் சீட்டு முதலியவற்றைத் திருடிச் செல்ல வந்த பங்காரு கைத் தவறுதலாக விட்டுச் சென்று விட்டான். அது தலையணைக்கு அடியில் கிடந்ததால் பிச்சுவும் அதைப் பார்க்கவில்லை.

பிச்சு கண் விழித்தபோது, இன்ஸ்பெக்டர் குருப் அவனைப் பார்த்து, "என்னோடேயே இருந்துகொண்டு புதுத் திருடர்களுடன் பழைய திருடனையும் பிடித்துக் கொடுத்து விட்டாயே! உன் சாமர்த்தியத்தைச் சொல்வதா, உன் அதிருஷ்டத்தைச் சொல்வதா?" என்று சந்தோஷப் பட்டார்.

பிச்சு பதில்பேசாமல் இருந்தான்.

"அது என்ன கடிதம்?" என்று விவரம் தெரியாமல் கேட்டான்.

"தெரியாதவன் மாதிரி கேட்கிறாயே. உன்னிடம் அகப்பட்ட செல்லமுத்துவின் கடிதம்தான். இதைத் தலையணைக்கு அடியில் வைத்திருந்தாயே!" என்றார்.

"செல்லமுத்து எழுதிய கடிதமா? எனக்கு ஒன்றுமே தெரியாதே!" என்றான் பிச்சு.

ஆனால் இன்ஸ்பெக்டர் பையன் பெருமையடித்துக் கொள்கிறான் என்று அவன் சொல்வதை நம்பவில்லை. எல்லாம் பிச்சு சாமர்த்தியமாகக் கண்டுபிடித்ததாகவே எண்ணினார்.

"அந்தப் பெட்டியை அங்கே புதைத்திருப்பார்கள் என்று எப்படிக் கண்டு பிடித்தாய்?" என்றார் குருப்.

"படகுக்காரர்களைத்தான் கேட்க வேண்டும். என்னைக் கேட்டால் எனக்கு எப்படித் தெரியும்? துறைமுகத்திலிருந்து படகில் ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பத்திரமான இடம் வேறு ஏது? கரையிலேயே புதைத்து வைத்து விட்டார்கள்."

"சபாஷ். அதனால்தான் நீ நடந்து வருவதாகச் சொன்னாய் போலிருக்கிறது. எனக்கு அவ்வளவு தூரம் எட்டவில்லை, பாரேன்!"

"நான் ஒரு யோசனையும் செய்யவில்லை" என்று உண்மையைச் சொன்னான் பிச்சு. அவன் சொல்வதை அவர் எங்கே ஒப்புக் கொள்ளப் போகிறார்?

ஏதோ தற்செயலாக எல்லாம் நடந்திருக்கிறது. இதெல்லாம் தன்னால்தான் நடந்ததாகச் சொன்னால் எப்படி யிருக்கும் ஒருவனுக்கு? அப்படித்தான் பிச்சுவுக்கும் இருந்தது; 'இவரிடம் பேசிப் பிரயோசனமில்லை' என்று அவன் பேசாதிருந்து விட்டான்.

"நீ வந்த வேலையை நான் சொல்வதற்கு முன்னாலேயே முடித்துக் கொடுத்து விட்டாய். இனி ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு நீ நங்கபுரம் போகலாம்.

காலேஜ் படிப்பு முடிந்ததும் உனக்குத் துப்பறியும் இலாகாவில் வேலை காத்திருக்கும்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

அன்றைத் தபாலில் குடுமி வைத்தியிடம் இருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அன்று இரவு புறப்பட்டு மறுநாள் காலையில் அவனும் ஊர் சுற்றிப் பார்க்க வருவதாக எழுதியிருந்தான்.

பிச்சுவுக்குத் துணை யாரும் இல்லாமல் கஷ்டமாகவே இருந்தது. குடுமி வைத்தி வருவதாக எழுதியிருந்ததைப் பார்த்ததும் ரொம்பச் சந்தோஷமாக இருந்தது.

மறு நாள் அதிகாலையிலேயே பிச்சு, குடுமி வைத்தியை அழைத்து வர எழும்பூர் ஸ்டேஷனில் போய் நின்றான்.

வண்டி வந்து நின்றதும் ஜேஜே என்று பிளாட்பாரம் முழுவதும் ஒரே கூட்டமாக இருந்தது. பிச்சு முதலில் குடுமி வைத்தியைக் கவனிக்கவில்லை. வேறு யாரோ வண்டியிலிருந்து இறங்குவதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அப்போது பின்னாலிருந்து குடுமி வைத்தி, "டேய் பிச்சு; இதோ இருக்கேண்டா!" என்று கூவிக் கொண்டே ஓடி வந்தான்.

நண்பர்கள் இருவரும் தோள் மேல் தோள் போட்டுக்கொண்டு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

"டேய், இது என்ன வண்டிடா?" என்று குடுமி வைத்தி எதிரே வந்த வண்டி ஒன்றைப் பார்த்துக் கூவினான்.

"அதுதான் ஆட்டோ ரிக்ஷா! எழும்பூரில் வரும்போதே மயிலாப்பூரில் சத்தம கேட்கும்டா!" என்றான் அசட்டுப் பிச்சு.

"இதிலே ஏறிக்கொண்டு போகலாமே" என்றான் வைத்தி.

உடனே ஆட்டோ ரிக்ஷா ஒன்றைப் பேசிக்கொண்டு நண்பர்கள் இருவரும் அதில் ஏறிக் கொண்டார்கள். போகும் வழியில் குடுமி வைத்தி, "டேய், சொல்ல மறந்து விட்டேனே! இரண்டு நாளாக நம்ப ஊர் ரகளைப் படறது. முந்தி கிரீன்லண்ட்ஸ் ஹோட்டல்லே ஒரு பெண் வைர நெக்லேஸை யாரோ கழற்றிக் கொண்டு போனானே, நீ கூட மறுநாள் அந்த நவாப் கோட்டையிலேருந்து கண்டு பிடிச்சுக் கொடுத்தியே, ஞாபகமிருக்கா?" என்றான்.

"ஆமாம்; ஞாபகம் இல்லாமெ என்ன? அந்தப் பெண்ணின் பெயர் குமாரி கல்பலதா தானே?"

"ஆமாம் - அவளை முந்தாநாளிலேருந்து காணோமாம், அவ அப்பா அம்மா ரெண்டு பேரும் வந்து உன்னைத் தேடினா. நீதான் இங்கே வந்துட்டியா, பாவம், அவர்கள் ரெண்டு பேரும் போய், போலீஸிலே புகார் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வருத்தத்தைப் பார்த்தால் ரொம்பப் பரிதாபமாய் இருந்தது. ஊர் முழுதும் இதுவேதான் பேச்சு. ராத்திரி சாப்பிட்டதும் மாடியில் போய்ப் படுக்கப் போனாளாம். காலையில் எழுந்திருந்து வரவேயில்லையாம். மேலே போய்ப் பார்த்தால் ஆளையே காணோமாம்! எப்படி இருக்கு, சமாசாரம்? ஊரே வரவர ரொம்பக் கெட்டுப் போயிருக்கு, இல்லே?" என்றான் குடுமி வைத்தி.

"நீ இந்தக் குடுமியை எடுக்கிற வரைக்கும் ஊர் இப்படித் தாண்டா இருக்கும்!" என்று விளையாட்டாக அவனுடைய இரட்டை மண்டையைத் தடவிக் கொடுத்தான் பிச்சு.

திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தவனாக, "ஆமாம் - குமாரி கல்பலதாவைத்தானே காணோம் என்று சொன்னாய்?" என்று கேட்டான்.

"ஆமாண்டா. விடிய விடியக் கதையைக் கேட்டுவிட்டு, சீதைக்கு ராமன் சித்தப்பா என்கிற கதையாகக் கேட்கிறாயே?"

"அவளை இப்போது பார்த்தேனே - ஸ்டேஷனிலே. நீ வந்த வண்டியிலேதான் அவளும் வந்திருக்கிறாள்!"

"என்னது?" என்றான் வைத்தி.

"உன் தலை! இதே வண்டியிலே தாண்டா அவளும் வந்திருக்கிறாள்!"

"கூட யார் வந்திருக்கிறது?"

"கூடவா? வந்து...வந்து... நான் சரியாக் கவனிக்கல்லேடா. ஆனா யாரோ வந்திருக்கிறதாக மட்டும் ஞாபகம் இருக்கு!" என்றான் பிச்சு.

"முந்தியே எனக்குக் காட்டாமல் போனயேடா!"

"நீ முந்தியே சொல்லாமல் போனயே!"

"அது சரி; அவளை எப்படியாவது இப்போ கண்டு பிடிச்சு அவளுடைய அப்பா அம்மாவுக்குத் தந்தி கொடுத்தால் தேவலேடா. இல்லாட்டா, பாவம், அவள்



அம்மா சாப்பிடாமல் செத்தே போயிடுவா போலிருக்குடா!'' என்றான் வைத்தி.

"ஏண்டா, நமக்கு வேறே வேலை இல்லையாடா? இந்தப் பதினஞ்சு லக்ஷம் ஜனத்தொகை கொண்ட ஊரிலே இந்தப் பெண்ணை நம்மாலே தேடித்தான் கண்டு பிடிக்க முடியுமா? பேசாமல் வந்த வேலையைப் பாரடா. ஜோரா இன்னிக்கு ஏரோட்ரோமுக்குப் போகலாம். நாளை மியூஸியம், ஜூ இப்படி எங்காவது போகலாம்!'' என்றான் பிச்சு.

இதற்குள் வண்டி கர்ண கடோரமாகக் கத்திக்கொண்டே அடையாற்றை அடைந்தது.

இன்ஸ்பெக்டர் குரூப் இவர்களுக்காகக் காத்திருந்தார். "இன்னிக்கு எங்கேயாவது போகப் போகிறாயா? வண்டி ஏதாவது வேணுமா?'' என்றார்.

"வண்டி இருக்கா? இருந்தால் தாராளமாகக் கொடுங்கள். பிச்சு ஏரோட்ரோமுக்குப் போகலாம்னு சொல்லிண்டு வந்தான்'' என்றான் வைத்தி.

"அப்படியா? ஆனால் நான் ஒரு கடிதாசு தருகிறேன். கொண்டு போங்கள். உங்களுக்கு எல்லாச் சௌகரியங்களும் அங்கே இந்த உத்தியோகஸ்தர் செய்து தருவார்!'' என்று கையோடு ஒரு கடிதமும் எழுதிக்கொடுத்தார்.

பகல் பதினொரு மணிக்குச் சாப்பாடு ஆயிற்று. குரூப் கீழேவந்து, என் நண்பர் ஒருவருக்குப் போன் செய்திருக்கிறேன். சற்றைக்கெல்லாம் வண்டி வரும். ரெடியாக இருங்கள்'' என்றார்.

அரை மணிக்கெல்லாம் அதே போல வண்டி வாசலில் வந்து, "பாம் - பாம்'' என்றது. நண்பர்கள் இருவரும் போய் வெகு ஜம்பமாக ஏறிக்கொண்டார்கள். கார் மீனம்பாக்கத்தை நோக்கிப் புறப்பட்டது.

(தொடரும்)

திருக்குறள்

அழ. வள்ளியப்பா

ஒன்றே முக்கால் அடியாலே
உலகம் தன்னைக் கவர்ந்ததுவாம்.

அன்றும், இன்றும் என்றென்றும்
அருமை பெருமை உடையதுவாம்.

பன்மொழி களிலும் வெளியாகிப்
பாரில் பரவி நிற்பதுவாம்.

பொன்மொழி யாவும் நிறைந்ததொரு
பொக்கிஷ மாகத் திகழ்வதாம்.

உள்ளம் தூய்மை உற்றிடவும்
உயரிய நன்மை பெற்றிடவும்

தெள்ளத் தெளிய உதவுவது
திருககுறள், திருக்குறள், திருக்குறளாம்.

டி. எ டி.

எஸ். மீனாக்ஷி

நெற்றியில் வேர்வை பொங்கி வழிய சுரேஷ், வீட்டு வாசலில் சைக்கிளில் வந்து இறங்கினான். திண்ணையில் அவனுடைய தாத்தா தன் பொக்கை வாயை மென்றுகொண்டு உட்கார்ந்திருந்தார். சுரேஷ் சாவகாசமாகச் சைக்கிளைக் கொண்டு போய் ரேழியில் வைத்துவிட்டுத் திண்ணைக்கு வந்தான்.

“தாத்தா! உங்களுக்கு இந்த ஊரிலே எவ்வளவு மதிப்பு! உங்கள் பேரைச் சொன்னேனோ இல்லையோ, பயல் அரண்டுவிட்டான்!” என்றான் சுரேஷ் உற்சாகத்துடன்.

சுரேஷ் அப்போதுதான் முதல் தடவையாக பட்டினத்திலிருந்து தன் தாத்தா இருக்கும் ஊருக்கு வந்திருந்தான். வந்த முதல் நாளே சைக்கிளை எடுத்துக் கொண்டு சுற்றக் கிளம்பினான்.

தாத்தாவுக்குப் பேரனின் பேச்சைக் கேட்டுச் சந்தோஷம் ஏற்பட்டது. “என்னடா பயலே, விசேஷம்!” என்றார் பெருமிதத்துடன்.

“தாத்தா! சைக்கிளைப் எடுத்துண்டு ரொம்ப தூரம் சுற்றிவிட்டுப் பார்க்குக்குப் போனபோது இருட்டிவிட்டது. அப்போதுதான் சைக்கிள் விளக்கில் திரியோ எண்ணெயோ இல்லாதது ஞாபகம் வந்தது. சும்மா ஏறாமல் உருட்டிக் கொண்டு வருவதற்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஒரு நிமிஷம் யோசனை பண்ணினேன்! ‘பீட்கான்ஸ்டேபிள் நிற்கிற இடத்திலே இறங்கிக் கொஞ்சம் நடந்து கொள்ளலாம்’ என்று முடிவு செய்துவிட்டு, வீட்டில் உட்கார்ந்து ஒரு மிதி மிதித்தேன்.”

தாத்தா குறுக்கிட்டார். “சரிதான்! சொப்பன லோகத்திலே சஞ்சரித்துக்கொண்டே வந்து கான்ஸ்டேபிள் மேலேயே மோதிவிட்டாயா?”

சூள் கொட்டினான் சுரேஷ். “அப்படி மோதியிருந்தால்தான்

தேவலையே! அந்த மோதல் அதிர்ச்சியிலே அணைந்து போயிடுத்துன்னு சாதித்திருப்பேனே! ஒரு போலீஸ்காரன், அதிக வெளிச்சம் இல்லாத சாலையிலே எதிரே வந்து தொலைந்தான். அவன் வரவை நான் பார்க்கவேயில்லை! சட்டென்று என்னை மறித்து நிறுத்திவிட்டான்.

"சரிதான்! ஸ்டேஷனுக்கு இழுத்துண்டு போனானா?" என்றார் தாத்தா.

"அவன், 'தம்பி! நீயாரு?' என்று அதட்டினான். எனக்குச் சட்டுன்னு உங்க பேரு ஞாபகம் வரலை."

"அட பயலே! என் பேர் டி. எஸ். பிரணதார்த்தி என்பது உனக்கு மறந்து போய்விட்டதோ?" என்றார்.

"கேளுங்க தாத்தா! 'என்ன தம்பி, முழிச்சுப் பார்க்கறே, பெரிய டி. எஸ். பி. மாதிரி?' என்றான் அவன். பளிச்சென்று உங்க பெயர் நினைவு வந்தது. "நான் டி.எஸ்.பி. பேரன்தான்; பெரியதெருவிலே இருக்கேன்" என்று சொல்லி முடிக்கு முன்பே அந்தப் போலீஸ்காரன் பெரிசா ஒரு சலாம் வைத்துவிட்டுப் போய்விட்டான். எனக்குச் சிரிப்பு தாங்கலே! அதைவிடப் பெருமை தாங்கவில்லை! நான் டி. எஸ். பி.என்று சுருக்கமாக உங்க 'இனிஷியலை' சொன்னபோதே அவன் நடுங்கினானே! டி. எஸ். பிரணதார்த்தி என்று முழுப் பெயரையும் சொல்லியிருந்தால் அப்படியே மயக்கம்போட்டுக் கீழே விழுந்திருப்பான்!" என்றான் பெருமிதத்துடன்.

தாத்தா புன்னகை பூத்தார். "பயலே! இந்த டி. எஸ். பி. சாமானிய ஆள் இல்லை என்பது தெரிந்ததா?" என்றார்.

அப்போது பாட்டி இந்தச்சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டே வாசலுக்கு வந்தாள்.

"சரிதான்! பேரன் கிட்டே கதை அளந்தது போதும்! சாப்பிட வாருங்கள்! டே சுரேஷ்! இதே தெருவிலே டிஸ்ட்ரிக்ட் போலீஸ் சூப்ரெண்டெண்ட் இருக்கார்! போலீஸ்காரன், உன்னைச் சூப்ரெண்டெண்ட் பேரன் என்று நினைத்துக் கொண்டுதான் விட்டுவிட்டான்!" என்றாள்.

"ஹா!" என்றான் சுரேஷ் வியப்புடன். இப்பொழுதுதான் போலீஸ்காரன் தன்னை விட்டுவிட்ட காரணம் அவனுக்குப் புரிந்தது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.

கண்ணன் கிளைக் கழகம்

சேலம்-II
- உபதலைவர்: V. ஜானகிராமன்
- செயலாளர்: T. P. செல்வன்
- பொருளாளர்: T. தியாகராஜன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வாசகசாலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சேர விரும்பும் கழக அங்கத்தினர்கள் 7, மார்க்கெட் தெருவில் சந்திக்கலாம்.

செந்தாரம்பட்டி
- உபதலைவர்: V. R. வெங்கடாசலம் (V. 57.)
- செயலாளர்: S. துரைராஜ்
- பொருளாளர்: N. ராஜேந்திரன்
- வா. நிர்வாகி: S. பெருமாள்

20 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 'முரசு' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடை பெறுகிறது.

பீளமேடு
- உபதலைவர்: R. சந்திரசேகரன்
- செயலாளர்: K. சந்திரசேகரன்
- பொருளாளர்: P. K. தேவராஜன்

பத்துப் பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

* * * *

மதுரை கண்ணன் கிளைக் கழகத்தில் புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

உபதலைவர்: R. V. ராஜு
செயலாளர்: A. சுந்தரராஜன்
S. சுரேஷ்
பொருளாளர்: S. L. நரசிம்மன்
வா. நிர்வாகி: S. லக்ஷ்மணன்

தர்மபுரியில்: கண்ணன் கிளைக் கழகம் ஸ்தாபிக்க P. V. துரைராஜ், 7/81, சலவைக்காரத் தெருவில் அங்கத்தினர்கள் சந்திக்கலாம்.

பேனு நண்பர்கள்

1. N. S. ராஜகோபாலன், 19. குப்பையர் தெரு, சென்னை-1.
2. V. நாராயணன், R. M. V. E. வீடு, கோனு பட்டு, திருச்சி ஜில்லா.
3. S. சீனிவாசன் (S. 404), 2. வெங்கடராமையர் தெரு, சென்னை-1.
4. B. லக்ஷ்மணன், 128. ஜவாஹர் கடைத்தெரு, கரூர். திருச்சி ஜில்லா.
5. M. அம்புரோஸ், வீட்டு எண் 24. என். ஜி. ஓ. பகுதி, பாளையம், திருவனந்தபுரம்.
6. மாஸ்டர். இக்னேஷியஸ் மோரைஸ், 158, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13, சிலோன்.
7. V. R. கமலாதேவி, கருகம்பனை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்.

1954

காலண்டர்

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்						ஜூலை	ஆகஸ்ட்	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்
வெள்	திங்	திங்	வியா	சனி	செவ்	1	8	15	22	29	வியா	ஞாயி	புத	வெள்	திங்	புத
சனி	செவ்	செவ்	வெள்	ஞாயி	புத	2	9	16	23	30	வெள்	திங்	வியா	சனி	செவ்	வியா
ஞாயி	புத	புத	சனி	திங்	வியா	3	10	17	24	31	சனி	செவ்	வெள்	ஞாயி	புத	வெள்
திங்	வியா	வியா	ஞாயி	செவ்	வெள்	4	11	18	25		ஞாயி	புத	சனி	திங்	வியா	சனி
செவ்	வெள்	வெள்	திங்	புத	சனி	5	12	19	26		திங்	வியா	ஞாயி	செவ்	வெள்	ஞாயி
புத	சனி	சனி	செவ்	வியா	ஞாயி	6	13	20	27		செவ்	வெள்	திங்	புத	சனி	திங்
வியா	ஞாயி	ஞாயி	புத	வெள்	திங்	[illegible]	14	21	28		புத	சனி	செவ்	வியா	ஞாயி	செவ்

Reg. No. M. 5